Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم     نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم     وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 32-33

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

17-24 துல்கஅதா 1438 ஹிஜ்ரி கமரி     10-17 ஸஹூர் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

10-17 ஆகஸ்டு 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காதவரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். மேலும், உண்மையான ஓரிறைமை அவனது உள்ளத்தில் நுழைய முடியாது. உறுதியான முறையில் இறைவனின் இருப்பை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த தூய முழுமையான ஓரிறைமை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும், சாந்தியும் அவருக்கு இருப்பதாக) நபி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட நபியாவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது. அவருடைய தூய குணயியல்புகளின் தாக்கத்தைக் கணக்கிடுவது மனிதனின் வேலையன்று. பிரித்தறிய வேண்டிய முறையில் அவரின் உயர் பதவியானது பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே! உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் அதே உலகிற்குக் கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே. அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே, அவரின் உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும், முன்னவர் பின்னவர் யாவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும், அவரின் குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலே நிறைவேற்றினான். ஒவ்வோர் அருளின் தலையூற்றும் அவரேயாவார். அவரிடமிருந்து அருள்கள் கிடைப்பதை ஏற்றுக் கொள்ளாமல் ஏதாவது சிறப்பு தனக்கு கிடைத்திருப்பதாக எவர் வாதம் புரிகின்றாரோ அவர் மனிதரல்ல. மாறாக அவர் ஷய்த்தானின் சந்ததியாவார். ஏனென்றால், ஒவ்வொரு சிறப்பின் திறவுகோலும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு இறை ஞானத்தின் கருவூலமும் அவருக்கு தரப்பட்டிருக்கின்றது. அவர் மூலமாக பெறாதவர் தொன்மையிலிருந்தே பேரிழந்தவராவார். நாம் எம்மாத்திரம் ? நமது உண்மை நிலை என்ன ? உண்மையான ஓரிறைமையை நாம் அந்த நபியின் மூலமாகவே பெற்றோம் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் நாம் அருளை மறுத்தவராக ஆகி விடுவோம். உயிருள்ள இறைவனை அடையாளங்கண்டு கொள்வதை நாம் அந்த முழுமை பெற்ற நபியின் மூலமாகவும் அவரது ஒளியின் மூலமாகவும் பெற்றோம். இறைவனின் முகத்தை நாம் காண முடிகின்ற அளவிலுள்ள இறைவனுடன் உரையாடுகின்ற அத்தகைய நற்பேறும் கூட இந்த கண்ணியமிக்க நபியின் மூலமாகவே நமக்கு கிடைத்தது. அந்த நேர்வழியின் சூரியனின் கிரணங்கள் வெயிலைப் போன்று நம் மீது விழுகின்றது. அதற்கு எதிரில் நிற்கின்ற அந்த நேரம் வரை மட்டுமே நாம் ஒளிமயமானவர்களாக இருக்க முடியும்.

அப்துல் ஹகீம் கான் கொண்டிருந்த கொள்கையைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாத நபர் அல்லது மார்க்கத்தைக் கை விட்டு விட்டு சென்ற ஒருவர் ஓரிறைமையில் நிலைத்திருந்து இறைவன் ஒருவன் என்பதையும் அவனுக்கு இணையாக எதுவும் இல்லை என்பதையும் அறிந்திருந்தால் அவரும் கூட ஈடேற்றத்தைப் பெற்று விடுவார். நம்பிக்கை கொள்ளாமல் இருந்ததாலும் அல்லது மார்க்கத்தைக் கை விட்டு விட்டுச் சென்று விட்டதாலும் அவர் மீது எந்தக் குற்றமும் இருக்காது என்ற எண்ணத்தில் உறுதியாக இருக்கின்ற மக்கள் உண்மையில் தவ்ஹீதின் உண்மை நிலையை அறியாதவர்களாக இருக்கின்றனர். நாம் மீண்டும் மீண்டும் எழுதி விட்டோம். அதாவது ஷய்த்தானும் கூட இவ்வாறே இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையாக எதுவும் இல்லை என்றே கருதி வந்தான்.

ஆனால், இறைவன் ஒருவன் என்று கருதுவதால் மட்டும் ஈடேற்றம் கிடைக்க முடியாது. மாறாக ஈடேற்றம் கிடைப்பது இரண்டு விஷயங்களில் அடங்கியிருக்கின்றது.

(1) முதலாவது விஷயம் இதுவாகும்: அதாவது முழுமையான உறுதியுடன் இறைவனின் இருப்பின் மீதும் அவனது ஓரிறைமையின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

(2) இரண்டாவது விஷயம் இதுவாகும்: அதாவது, ஏக இறைவன் ஜல்லஷானுஹு மீதுள்ள முழுமையான அன்பு எந்த அளவு அவனது உள்ளத்தில் ஊடுருவிச் சென்று விட வேண்டும் என்றால், அது அவனுடன் ஒன்றியிருப்பது மற்றும் மிகைத்திருப்பதன் விளைவாக இறைவனுக்கு கட்டுப்படுவது முற்றிலுமாக அவனது உயிருக்கு சுகத்தைத் தரக்கூடியதாக இருக்க வேண்டும். அது அல்லாமல் அவனால் உயிர் வாழ முடியாமல் இருக்க வேண்டும். அவன் மீதுள்ள அன்பு மற்ற அனைவர் மீதுள்ள அன்பை அழிக்கக் கூடியதாகவும் ஒன்றுமற்றதாக ஆக்கக் கூடியதாகவும் ஆக வேண்டும். இதுவே உண்மையான ஓரிறைமையாகும்.

நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றாமல் இதனை பெற முடியாது. ஏன் பெற முடியாது ? அதற்கான பதில் இதுவாகும். இறைவன் மறைவிலும் மறைவாகவும் நுட்பத்திலும் நுட்பமானவனாகவும் இருக்கின்றான். அவன் மிகவும் மறைவில் இருக்கின்றான். அவனை மனிதனின் அறிவானது தனது ஆற்றலால் மட்டும் கண்டுபிடித்து விட முடியாது. அறிவின் மூலமாக கிடைக்கின்ற எந்தவொரு தெளிவும் அவனது இருப்பிற்கான உறுதியான ஆதாரமாக இருக்க முடியாது. ஏனென்றால், இந்த உலகிலுள்ள படைப்புகளைப் பார்த்து படைத்தவனின் தேவையை உணர்கின்ற அந்த எல்லை வரை மட்டுமே அறிவின் ஓட்டமும் முயற்சியும் இருக்கின்றது. ஆனால் தேவையை உணர்வது என்பது வெறொரு விஷயமாகும். எந்த இறைவனின் தேவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அவன் உண்மையிலேயே இருக்கவும் செய்கின்றான் என்று கண்களால் கண்டு உறுதி கொள்கின்ற அந்த தகுதியை அடைவது என்பது வேறொரு விஷயமாகும். ஏனென்றால் அறிவின்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நபிமார்களின் வரலாற்றில் நாம் பார்ப்பது போன்று அவர்கள், தாம் நபி என்று வாதம் செய்த பிறகு அவர்களுக்கு எதிர்ப்பும் இருக்கின்றது. ஜமாஅத் பரவப்பரவ எதிர்ப்பும், பொறாமையின் நெருப்பும் அதிகரிக்க ஆரம்பித்து விடுகின்றது. எதிரிகளும் தங்களால் இயன்ற வரையில் எல்லா வகையிலும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், வாதம் செய்யக் கூடியவர் அல்லாஹ்விடமிருந்து அனுப்பப்பட்டவராக இருப்பதால், எதிர்ப்புகள் இருந்தும் கூட அல்லாஹ் அவருக்கு அவரது முன்னேற்றம் தொடர்பாகவும், இறுதி வெற்றி தொடர்பாகவும் வாக்குறுதிகளையும் நற்செய்திகளையும் வழங்கி இருப்பதால் எந்தவொரு எதிர்ப்பும் அவரது முன்னேற்றத்தின் வழியில் தடையாக இருப்பதில்லை; தடையாக இருக்கவும் முடியாது.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மஸீஹாகவும் மஹ்தியாகவும் அனுப்பியபோது அவர்களுடனும் இந்த நடைமுறைக்கேற்பவே நடந்து கொள்ளப்பட்டது. மேலும் அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப அவனது ஆதரவும் உதவியும் அவர்களுக்கு கிடைக்க வேண்டியது இருந்தது. அல்லாஹ் அவர்களுக்கு அவ்வாறே உதவி செய்தான். அவர்களது ஜமாஅத்துடனும் அல்லாஹ் இவ்வாறே நடந்து கொள்கின்றான்.

சில இடங்களில் எதிரிகளின் சூழ்ச்சியை இறைவன் அவர்கள் பக்கமே திருப்பி விட்டு தனது உதவியின் காட்சிகளைக் காட்டுகின்றான். சில இடங்களில் மக்களுக்கு சுயமே வழிகாட்டியவாறு அஹ்மதிய்யத்தின் உண்மையை அவர்களுக்கு காட்டுகின்றான். சில நேரங்களில் மற்றவர்களது தாக்குதல்களிலிருந்து பாதுகாத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு உதவி செய்யுமாறு மற்றவர்களது உள்ளத்தில் அவன் போடுகின்றான். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியவாறு செயலளவில் அவ்வப்போது அவன் அதை வெளிப்படுத்துகின்றான்.

எதிரிகளின் தீய முடிவு, நல்லியல்பு கொண்ட மக்களுக்கு கனவுகள் மற்றும் கஷ்ஃப்கள் மூலம் உண்மையின் பக்கம் வழிகாட்டுவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை உள்ளத்தால் நேசிக்கின்ற பிரிவினரை அதிகமாக்குவது ஆகியவை தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

இறைவன் எதிர்ப்புகள் இருந்தும் கூட ஷய்த்தானிய தாக்குதல்களிருந்தும் கூட நல்லியல்பு கொண்ட மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டே இருக்கின்றான். அவர்களது நெஞ்சங்களைத் திறக்கின்றான். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகின்றான். இத்தகைய எண்ணற்ற சம்பவங்கள் நம் முன்னால் வருகின்றன. அல்லாஹ்வே மக்களைப் பிடித்து அவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அவன் ஆதரவாக நின்று அவர்களுக்கு உதவி செய்கின்ற காட்சிகளைக் காட்டுகின்றான்.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 7 ஜுன் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **7 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده ورسوله
أما بعد فأعوذ بالله من الشيطان الرجيم - بسم الله الرحمن الرحيم
الحمد لله رب العالمين. الرحمن الرحيم. مالك يوم الدين. إياك نعبد
وإياك نستعين. اهدنا الصراط المستقيم. صراط الذين أنعمت عليهم
غير المغضوب عليهم ولا الضالين.

நபிமார்களின் வரலாற்றில் நாம் பார்ப்பது போன்று அவர்கள், தாம் நபி என்று வாதம் செய்த பிறகு அவர்களுக்கு எதிர்ப்பும் இருக்கின்றது. ஜமாஅத் பரவப்பரவ எதிர்ப்பும், பொறாமையின் நெருப்பும் அதிகரிக்க ஆரம்பித்து விடுகின்றது. எதிரிகளும் தங்களால் இயன்ற வரையில் எல்லா வகையிலும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், வாதம் செய்யக் கூடியவர் அல்லாஹ்விட –மிருந்து அனுப்பப்பட்டவராக இருப்பதால், எதிர்ப்புகள் இருந்தும் கூட அல்லாஹ் அவருக்கு அவரது முன்னேற்றம் தொடர்பாகவும், இறுதி வெற்றி தொடர்பாகவும் வாக்குறுதிகளையும் நற்செய்திகளையும் வழங்கியிருப்பதால் எந்தவொரு எதிர்ப்பும் அவரது முன்னேற்றத்தின் வழியில் தடையாக இருப்பதில்லை; தடையாக இருக்கவும் முடியாது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மஸீஹாகவும் மஹ்தியாகவும் அனுப்பியபோது அவர்களுடனும் இந்த நடைமுறைக்கேற்பவே நடந்து கொள்ளப்பட்டது. மேலும் அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப அவனது ஆதரவும் உதவியும் அவர்களுக்கு கிடைக்க வேண்டியது இருந்தது. அல்லாஹ் அவர்களுக்கு அவ்வாறே உதவி செய்தான். அவர்களது ஜமாஅத்துடனும் அல்லாஹ் இவ்வாறே நடந்து கொள்கின்றான். எங்கு எதிர்ப்புகள் தொடர்பாக அல்லாஹ் அவர்களுக்கு முதலிலேயே தெரிவித்திருந்தானோ அங்கு எதிரிகளுக்கு ஏற்படவிருக்கின்ற தீய முடிவு, எதிர்ப்புகள் இருந்தும் கூட அவர்களது ஜமாஅத் முன்னேறிச் செல்வது மேலும் அவர்களுக்கு அவன் செய்ய இருக்கின்ற உதவிகள் தொடர்பாக அவர்களுக்கு அறிவித்திருந்தான்.

அல்லாஹ் அவர்களை நோக்கி கூறினான். இது தொடர்பாக பல இல்ஹாம்கள் உள்ளன. ஓர் இல்ஹாம் இவ்வாறு வந்தது: 'கலப்பற்ற தன்மையுடன் உள்ளத்தால் உம்மை நேசிக்கின்ற பிரிவினரை நான் அதிகமாக்குவேன்'. (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 77)

பிறகு இன்னோர் இல்ஹாமில் 'நான் உம்முடனும் உமது நேசத்திற்குரியவருடனும் இருக்கின்றேன்' என்று கூறினான். (பத்ர் தொகுதி 6 எண் 51; 19 டிசம்பர் 109, பக்கம் 4) 'எவர்களது உள்ளத்தில் நம் தரப்பிலிருந்து நாம் இல்ஹாமை இறக்குவோமோ அவர்கள் மூலம் நாம் உமக்கு உதவி செய்வோம்' என்றும் அல்லாஹ் அவர்களிடம் கூறினான். (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5, பக்கம் 648) பிறகு 'நான் உமக்கு கண்ணியத்தை வழங்குவேன்; மேலும் அதை அதிகரிக்கும்படி செய்வேன்' என்று அல்லாஹ் கூறினான். (ஆஸ்மானி ∴பைஸலா. ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 342) பிறகு இன்னோர் இல்ஹாமில் 'அல்லாஹ் தன் தரப்பிலிருந்து உமக்கு உதவி செய்வான்' என்று கூறினான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 77) பிறகு அன்னாரது பிரச்சாரம் தொடர்பாகவும் தூதுச் செய்தியை எட்ட வைத்தல் தொடர்பாகவும் 'நான் உனது பிரச்சாரத்தை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன்' என்று இறைவன் அவர்களிடம் கூறினான். (அல்ஹகம் தொகுதி 2 எண் 5,6; 27 மார்ச் - 2 ஏப்ரல் 1898 பக்கம் 13) பிறகு அவர்களை நோக்கி 'நானும் எனது தூதர்களும் வெற்றி பெறுவோம் என்பதை இறைவன் எழுதி வைத்து விட்டான்' என்றும் இறைவன் கூறினான். (அர்பயீன் எண் 2. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 355)

இவ்வாறே நான் ஏற்கனவே கூறியதுபோன்று அவர்களுக்கு இறைவனிடமிருந்து கிடைக்க இருக்கின்ற ஆதரவுகள், உதவிகள் தொடர்பாகவும் எண்ணற்ற இல்ஹாம்கள் இருக்கின்றன. இவை வெளிப்படையான விஷயங்கள் மட்டுமல்ல. இவற்றை பொய்யான முறையில் இறைவனுடன் தொடர்புபடுத்தி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறவில்லை (நவூதுபில்லாஹ்). மாறாக, அல்லாஹ் ஒவ்வொரு காலத்திலும் இந்த தனது உதவியை வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டும் இருக்கின்றான். சில இடங்களில் எதிரிகளின் சூழ்ச்சியை இறைவன் அவர்கள் பக்கமே திருப்பி விட்டு தனது உதவியின் காட்சிகளைக் காட்டுகின்றான். சில இடங்களில் மக்களுக்கு சுயமே வழிகாட்டியவாறு அஹ்மதிய்யத்தின் உண்மையை அவர்களுக்கு காட்டுகின்றான். சில நேரங்களில் மற்றவர்களது தாக்குதல்களிலிருந்து பாதுகாத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு உதவி செய்யுமாறு மற்றவர்களது உள்ளத்தில் அவன் இடுகின்றான். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியவாறு செயல் அளவில் அவ்வப்போது அவன் அதை வெளிப்படுத்துகின்றான். இப்போது இது தொடர்பான சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன். எதிரிகளின் தீய முடிவு தொடர்பாக நான் இரு சம்பவங்களை எடுத்துள்ளேன். அவை எங்கு அஹ்மதிகளின் ஈமான் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்குமோ அங்கு மற்றவர்களுக்கும் அது அஹ்மதிய்யத்தின் உண்மைக்கான அடையாளமாகவும் உள்ளது.

நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் காதியான் அவர்கள் எழுதுகின்றார்கள்: இஸ்ஹாக் சாஹிப் என்ற ஒரு முஅல்லிம் அவர்கள் ரமலானுக்கு முன்னதாக ஒரு கிராமத்திற்குச் சென்றார். ரமலானின் நேரங்கள் தொடர்பாக தெரிவிப்பதற்கு அவர் தனது உறவினர் ஒருவரது வீட்டிற்குச் சென்றார். Time Table –ஐக் கொடுத்த பிறகு ரமலானின் மகத்துவம் மற்றும் அருள்கள் குறித்து அவர் தனது குடும்பத்தினருக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது இக்பால் என்ற பெயரை உடைய ஜமாஅத் அல்லாத ஒரு நபர் அங்கு வந்து அமர்ந்தார். சிறிது நேரம் வரை அவர் முஅல்லிம் சாஹிப் அவர்கள் கூறிய விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு அவர் வீட்டில் உள்ளவர்களிடம் இவர் யார்? என்று கேட்டார். அந்த முஅல்லிம் சாஹிபின் உறவினர்கள் தெளிவாக அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முஅல்லிம் என்று தெரிவிப்பது பொருத்தமாக இருக்காது என்று கருதினர். இவர் இந்த கிராமத்திலிருந்து வந்துள்ளார் என்று மட்டும் அவர்கள் கூறினர். ஆனால் முஅல்லிம் சாஹிப் அவர்கள் தெளிவான முறையில் தன்னைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முஅல்லிம் ஆவேன் என்று கூறினார். இதைக் கேட்டதும் அந்த நபர் மிகவும் கோபப்பட்டார்; ஆத்திரமடைந்தார். முஅல்லிம் சாஹிப் அவர்கள் தன்னைப் பற்றி முழுமையான முறையில் அறிமுகம் செய்து கொள்ள விரும்பினார். அவரிடமிருந்த தவறான எண்ணங்களை அகற்ற விரும்பினார். ஆனால் அந்த நபர் அவர் கூறுவதைக் கேட்க மறுத்து விட்டார்.

அந்த முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்: அவருடன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் திருக்குர்ஆன், இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பெயரைக் கூறும்போது அந்த நபர் இஸ்லாமிய மரபுச் சொற்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை உங்களுக்கு இல்லை என்று கூறினார். அதே பாகிஸ்தானி மவ்லவியின் தாக்கம் அவரிடம் காணப்பட்டது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பெயர் கூறப்படும்போது அந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் ஜமாஅத்தையும் மிகவும் அசுத்தமான சொற்களினால் ஏசினார். மேலும் நான் சவூதி அரேபியா, பஹ்ரைன் மற்றும் கத்தார் ஆகிய இடங்களுக்கு போய் வந்திருக்கின்றேன். உங்களைப் பற்றி எல்லாமே எனக்கு தெரியும். எல்லா இஸ்லாமிய நாடுகளும் உங்களுக்கு எதிராக ஃபத்வா கொடுத்திருக்கின்றன. மேலும் ஒரே நேரத்தில் பாம்பையும் காதியானியையும் நீங்கள் பார்க்க நேர்ந்தால் பாம்பை விட்டு விடுங்கள்; காதியானியைக் கொன்று விடுங்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றது என்றும் அந்த நபர் கூறினார்.

முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்: இவ்வாறு கூறியவாறு மீண்டும் மீண்டும் அவர் என்னை அடிப்பதற்காக எழுந்தார். காதியானியாகிய உன்னை அடிப்பதற்கும் கொல்வதற்கும் நற்கூலியைச் சம்பாதிப்பதற்கும் இன்று எனக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்று அவர் கூறினார். எவ்வாறிருப்பினும் தனது எண்ணத்தில் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்: நான் மிகவும் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் அவர் கூறிய எல்லா விஷயங்களையும் கேட்டேன். அவர் கூறிய தறக்குறைவான வீணான விஷயங்களையும் ஏச்சுப் பேச்சுக்களையும் கேட்டேன். அவர் தரக்குறைவான தீய சொற்களை அதிகமாக கூறியபோது நான் அவரிடம் நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முஅல்லிம் ஆக இல்லாமல் இருந்தால் அடிதடியில் இறங்குவது மற்றும் மரணிப்பது என்ற உங்களது விருப்பத்தையும் நான் நிறைவேற்றியிருப்பேன். ஆனால் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு விட்டு அதற்குப் பகரமாக உங்களுக்காக துஆ செய்ய வேண்டும் என்ற போதனை எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, நான் எதையும் கூறப்போவதில்லை என்று நான் கூறியதைக் கேட்டதும் அவர் அமைதியாக இருந்தார். சுற்றுச் சூழலைப் பார்த்து விட்டு அமர்ந்து விட்டார். இன்றைய நாளுக்குப் பிறகு நீங்கள் இந்த கிராமத்தில் தென்பட்டால் மிகப்பெரும் விளைவுகளைச் சந்திக்க வேண்டியது வரும் என்று என்னை அந்த நபர் எச்சரித்திருந்தார். அதற்கு நான் அவரிடம் முழுமையான விளைவு யாருக்கு சாதகமாக இருக்கும் என்பதைப் பற்றி காலம்தான் பதில் சொல்லும் என்று கூறி விட்டு அமைதியாக அங்கிருந்து எழுந்து வந்து விட்டேன். இந்த நபர் அருகிலிருந்த கிராமங்களிலுள்ள அஹ்மதிகளிடமும் நீங்கள் காதியானியிலத்தை விட்டு விடுங்கள் என்று கூறினார். ஆனால் மக்கள் அவர் கூறியதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை.

முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்: ரமலானுக்குப் பிறகு 15 நாட்களுக்கு நான் விடுப்பில் சென்றேன். நான் திரும்பி வந்தபோது வயதான ஒரு பெண்மணி ஜமாஅத்தை ஏசிப் பேசிய மவ்லவி இக்பாலுக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு அவர் இறந்து விட்டார் என்று கூறினார். இந்த சம்பவத்தினால் அந்தக் கிராமத்தைச் சார்ந்த அஹ்மதிகளின் ஈமான் அதிகரித்ததுடன் மட்டுமல்லாமல் ஜமாஅத்தைச் சார்ந்த மற்றவர்களும் கூட இதனால் பெரும் தாக்கத்திற்கு ஆளாகினர். அவர்கள் தமது கண்களால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய உதவியைக் கண்டனர். அன்னாரை இழிவுபடுத்திய நபர் இழிவடைந்து அழிந்து போனதையும் அவர்கள் கண்டனர்.

இவ்வாறே யமனிலிருந்து ஒரு நபர் எதிரிகளின் முடிவு பற்றி இவ்வாறு எழுதுகின்றார்: நான் அஹ்மதியான நாளிலிருந்து தப்லீக் செய்து வருகின்றேன். குறிப்பாக இளைஞர்களின் ஒரு குழு தரப்பிலிருந்து கடுமையான எதிர்ப்பையும் மிரட்டல்களையும் அவர் எதிர்கொள்ள வேண்டியது வந்தது. இவர் கூறுகின்றார்: 2010 –ல் எனது பக்கத்து வீட்டுக்காரரும் எனது சில நண்பர்களும் என்னை வற்புறுத்தி தங்களது ஜாமிஅத்துல் ஈமான் என்ற மத்ரஸாவிலுள்ள ஷேக்கிடம் பேசுவதற்காக அழைத்துச் சென்றனர். அங்கு ஒரு மவ்லவியும் வந்தார். நான் முதலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்கான ஆதாரங்களை எடுத்துக் கூறினேன். பிறகு முர்தத்துகளை கொலை செய்வது, ஜிஹாது மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் ஆகிய தலைப்புகளில் கருத்துக்களைக் கூறினேன். அங்கு வந்திருந்த எல்லாருமே எந்த ஆதாரங்களையும் கூறாமலேயே தங்களது கொள்கைகளை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தனர். நான் திருக்குர்ஆனிலிருந்து நபிமொழிகளிலிருந்தும் ஆதாரங்களை எடுத்துக் கூறினேன். எவ்வாறிருப்பினும் அவர்களது பெரிய ஷேக் எங்களுடன் சிறிதளவு கண்ணியத்துடன் நடந்து கொண்டார். ஆனால் மற்றவர் மிகவும் தீய சொற்களைக் கூறினார். அவர் முபாஹிலாவிற்காக அழைப்பையும் விடுத்தார். நான் அவரிடம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்ப்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

முபாஹிலா இமாமுடன்தான் நடக்கும் என்று கூறினேன். ஆனால் அவரது பிடிவாதத்தின் காரணமாகவும், எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவம் மீது உறுதியில்லை என்று இம்மக்கள் கருதிவிடக் கூடாதே என்று எண்ணியதாலும் நான் அவர் விடுத்த முபாஹிலா அழைப்பை ஏற்றுக் கொண்டேன். பிறகு விஷயம் அங்கேயே முடிவுக்கு வந்தது. இதற்குப் பிறகு இந்த இளைஞர்கள் என்னை அச்சுறுத்தியும் மிரட்டியும் வந்தனர்; ஏசிப் பேசினர். தப்லீக் செய்வதிலிருந்தும் தடுத்து வந்தனர். ரமலானின் இறுதியில் நான் வீட்டை விட்டு வெளியேறினேன். அப்போது ஒரு சிறுவன் என்னிடம் சச்சா! இந்த இளைஞர்கள் உங்களுக்கு எதிராக திட்டங்களை தீட்டுகின்றனர் என்று கூறினான். அவர்களில் சிலர் என்னிடம் வந்து என்னை கொலை செய்யப் போவதாக மிரட்டினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மிகவும் மோசமாக ஏசினர்.

அவர் கூறுகின்றார்: காயமடைந்த உள்ளத்துடன் நான் வீட்டிற்குத் திரும்பி வந்தேன். இரண்டு ரக்அத்துகள் நஃபில் தொழுது துஆ செய்தேன். அல்லாஹ்வே! இவர்களுக்கு எதிராக நீ உனது வல்லமையைக் காட்டுவாயாக என்று துஆ செய்தேன்.

இவர் கூறுகின்றார்: இதற்குப் பிறகு இரண்டு நாட்கள்தான் கழிந்திருக்கும். இந்த இளைஞர்களுக் –கிடையில் சண்டை ஏற்பட்டது. அவர்களில் ஒருவர் மற்றவருக்கு எதிராக கத்தியைத் தூக்கினர். சண்டையின்போது ஒரு சிறுவரது முகத்தில் கத்திக்குத்து பட்டது. இந்த சம்பவம் நடந்து ஒரு மாதம் கழிந்த பிறகு இந்த மக்கள் அங்கிருந்து எங்கோ சென்று விட்டனர். அதற்குப் பிறகு இதுவரை அவர்கள் தென்படவில்லை.

அவர் கூறுகின்றார்: எனது பக்கத்து வீட்டுக்காரரும் தனது வீட்டை விற்று விட்டு வேறு இடத்திற்குச் சென்று விட்டார். அந்த ஜாமிஆவின் எஜமானரிடமிருந்து ஏனைய கோத்திரங்களைச் சார்ந்த கிளர்ச்சியாளர்கள் அந்த ஜாமிஆவைக் கைப்பற்றி தங்களது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்து விட்டனர். அவர்கள் அங்கிருந்து சவூதி அரேபியாவிற்குச் சென்று விட்டனர். அவர்களது ஜாமிஆவும் அதன் மீது குண்டுகள் விழுந்ததன் காரணமாக மணல் குவியலாக மாறி விட்டது.

இன்றைய நாட்களில் நாம் பௌதீக உலகில் உலக முன்னேற்றத்தின் காரணமாக மக்கள் மார்க்கத்தை விட்டு விலகிச் செல்வதைப் பார்க்கின்றோம். ஆனால் மார்க்கத்தின் மீது விருப்பம் கொண்டவர்களும் உலகில் இருக்கின்றனர். சரியான வழியை அவர்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர். அல்லாஹ்வும் அவர்களது உள்ளத்தில் இருப்பதை அறிந்தவனாக இருக்கின்றான். எனவே, காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்காக அவர்களது உள்ளங்களை இறைவன் திறக்கின்றான். உலகம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இறைவன் அவர்களை அனுப்பியுள்ளான். அல்லாஹ்வின் அருளால் உலகம் அவர்களை ஏற்றுக் கொண்டேயிருக்கின்றது.

ஐவரிகோஸ்டின் முபல்லிக் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒரு கிராமத்தில் அங்குள்ள உள்ளூர் முபல்லிக்குடன் தப்லீக் செய்வதற்காக நான் சென்றேன். மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் வருகை தொடர்பாகக் கூறினேன். சிறிது காலம் கழிந்த பிறகு மீண்டும் அங்கு சென்றேன். அப்போது இந்த கிராமத்தின் இமாமும் 15 நபர்களும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களிடம் இந்த மாதத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய இஜ்திமா அபித்ஜான் (Abidjan) -ல் நடைபெறுகிறது என்று கூறப்பட்டது. அப்போது கிராமத்துவாசிகள் ஒரு நபரை அபித்ஜான் (Abidjan) -ற்கு அனுப்பி வைப்போம். அதன் மூலம் அவர் ஜமாஅத்தின் அருகிலிருந்து அந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பார்க்க வேண்டும் என்று கூறினர். அதன்படி அந்த கிராமத்தைச் சார்ந்த ஒரு நபர் இஜ்திமாவில் கலந்து கொண்டார். திரும்பி வந்து அபித்ஜான் (Abidjan) -ல், தான் பார்த்தவற்றை மக்களுக்கு கூறினார். எப்படி இந்த மக்கள் உள்ளனர் என்பதைக் கூறினார். இதனால் அங்கு மிகவும் நல்ல தாக்கம் ஏற்பட்டது. சிறிது காலம் கழிந்த பிறகு இவர்கள் மீண்டும் தப்லீக் செய்வதற்காக சென்றபோது இரவில் இஷா தொழுகைக்குப் பிறகும் அதிகாலையில் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை தொடர்பாக கேள்விகளை கேட்டவர்களுக்கு பதில் கொடுக்கப்பட்டது. மிகவும் நீண்ட நேரம் கேள்வி பதில் நிகழ்ச்சி நடந்தது. இதனால் மேலும் 26 நபர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைத்தது என்று இவர் கூறுகின்றார். இவ்வாறு அங்கு 41 பேர்களைக் கொண்ட ஒரு ஜமாஅத் நிறுவப்பட்டது.

எதிரிகள் அஹ்மதிய்யத்தை அழிப்பதற்கு எந்த அளவு அழுத்தம் காட்டுகின்றனர்? மேலும் அல்லாஹ் எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப அவர்களை நேசிக்கின்ற பிரிவினரை அதிகரிக்கச் செய்கின்றான்? இதைப் பற்றிய ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன்.

பெனினின் முபல்லிக் அன்ஸர் சாஹிப் எழுதுகின்றார்: அங்குள்ள இமாமுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு முறையாக அங்கு ஜுமுஆ தொழுகை ஆரம்பமானது. மவ்லவிகளுக்கு இது பற்றி தெரிய வந்ததும் அவர்கள், மக்கள் அஹ்மதிய்யத்தை கை விட்டு விட வேண்டும் என்பதற்காக கடுமையாக அவர்களை எதிர்த்தனர். ஆனால் இந்த ஜமாஅத்தைச் சார்ந்த எல்லா புதிய அஹ்மதிகளும் உறுதியுடன் ஜமாஅத்தில் நிலைத்து நின்றனர். அவர்களுக்கு இதிலும் தோல்வி ஏற்பட்டதனால் அந்த மவ்லவிகள் அங்கிருந்த அரசரிடம் சென்றனர். இவர்களை அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள் என்று அவரிடம் கூறினர். அரசர் நமது ஜமாஅத் தலைவரை அழைத்து உங்களுக்கு பள்ளிவாயில் வேண்டும் என்றால் அஹ்மதி அல்லாத மவ்லவிகள் உங்களுக்காக பள்ளிவாயிலைக் கட்டித் தருவர். எனவே நீங்கள் அஹ்மதிய்யத்தை கை விட்டு விடுங்கள் என்று கூறினார். ஜமாஅத் தலைவர் அவர்கள், அவரிடம் அஹ்மதிய்யத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? என்று கேட்டார். அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் மவ்லவிகள், அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல. இவர்கள் Boko Haram தீவிரவாதிகள் ஆவர். இவர்கள் நம் அனைவரையும் கொன்று விடுவர் என்று கூறுகின்றார் என்று அரசர் கூறினார். அதற்கு ஜமாஅத் தலைவர், அரசரிடம் அஹ்மதிய்யத்தே உண்மை இஸ்லாம் ஆகும். மவ்லவிகள் எங்களை ஏமாற்றுகின்றனர் என்று கூறினார். முதலில் அரசர் அவர் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. அஹ்மதிய்யத்தை கை விட்டு விடுங்கள். அதை விட்டு விடாமல் இருந்தால் நான் உங்களை கிராமத்தை விட்டு வெளியேற்றி விடுவேன் என்று கூறினார். அப்போது ஜமாஅத் தலைவர் அவர்கள் நாங்கள் கிராமத்தை விட்டு விட்டு சென்று விடுவோம். ஆனால் அஹ்மதிய்யத்தை கை விட்டு விட மாட்டோம் என்று கூறினார்.

இதுவே ஏழைகளான மிகத் தொலை தூரத்தில் வசிக்கின்ற மக்களின் ஈமானாகும். இதைக் கேட்ட அரசரின் உள்ளம் மாறி விட்டது. நீங்கள் கிராமத்தை விட்டு விட்டு செல்ல வேண்டிய தேவையில்லை என்று அரசர் கூறினார். இவ்வாறு அல்லாஹ் அங்கு அவர்களின் பாதங்கள் உறுதியாக பதிந்திருப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தான். ஏற்றுக் கொண்டவர்களின் ஈமானை


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**


*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**


*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

உறுதிப்படுத்தி அவர்களை அன்பில் முன்னேறச் செய்ததுடன் மட்டும் அல்லாமல் எதிரியின் உள்ளத்தையும் மென்மையடையச் செய்து அல்லாஹ் தனது உதவியையும் ஆதரவையும் வழங்கினான்.

எதிரிகளின் முடிவு மற்றும் அல்லாஹ்வின் உதவி தொடர்பான ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறியவாறு பெனினின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: எனது மண்டலத்தில் இரண்டு பெரிய வானொலி நிலையங்கள் மூலம் வாரந்தோறும் ஜமாஅத்தின் தப்லீக் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. இந்த பகுதியில் பெரும் எண்ணிக்கையில் ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்று சேர்கின்றது. ஒரு வானொலி நிலையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் 30 நிமிட நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. ஆனால், இந்த Radio Chennel –ன் Vice Director நம்மை எதிர்த்து வந்தார். நமது நிகழ்ச்சிகளில் தடையை ஏற்படுத்த முயற்சி செய்து வந்தார். அல்லாஹ் என்ன செய்தான் என்றால் அதே வனொலி நிலையத்திலிருந்து லஞ்ச குற்றச்சாட்டின் பேரில் இந்த Vice Director பணி நீக்கம் செய்யப்பட்டார். நீதிமன்றம் அவரை கைது செய்து தண்டனை வழங்கும்படி தீர்ப்பு கூறியது.

புதிதாக பொறுப்பேற்ற Vice Director அவர்களை நாங்கள் எங்கள் மிஷன் ஹவுஸிற்கு வருமாறு அழைத்தோம். அவருக்கு ஜமாஅத் மற்றும் இஸ்லாத்தின் கொள்கைகள் பற்றி எடுத்துக் கூறினோம். சில நூல்களையும் படிப்பதற்காகக் கொடுத்தோம். மேலும் நமது தப்லீகின் நோக்கம் என்ன என்பதைப் பற்றி கூறினோம். இதற்குப் பிறகு சிறிது காலம் வரை எங்களது தப்லீகை அவர் கேட்டுக் கொண்டிருந்தார். சிறிது காலம் கழிந்த பிறகு மீண்டும் அவரை சந்தித்தபோது இந்த புதிய Director நான் உங்களது தப்லீகினால் பெரும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். உங்களது தப்லீகின் வழிமுறை உள்ளத்தை மிகவும் ஈர்க்கக் கூடியதாக இருக்கின்றது. நீங்கள் உங்களது ஒரு நிகழ்ச்சிக்காக கொடுக்கின்ற அதே தொகையில் இன்னொரு நிகழ்ச்சியை இலவசமாக வாரந்தோறும் நடத்துவதற்கான அனுமதியை நான் தருகின்றேன். அதன் மூலம் உண்மையான மார்க்க போதனைகளைப் பற்றி பொதுமக்களுக்கு தெரிய வேண்டும். இஸ்லாம் தொடர்பான தவறான கொள்கைகளை அகற்ற வேண்டும் என்று அவர் கூறினார். முதலில் ஒரு நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்துவது எப்படி என்ற கவலை இருந்தது. மறுபுறம் அல்லாஹ் எவ்வாறு அருள் செய்தான் என்றால் அதே செலவில் இன்னும் அதிகப்படியான நேரத்தில் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான சந்தர்ப்பம் நமக்கு கிடைத்தது. எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தனது உதவிகளை வழங்குவதாக அல்லாஹ் செய்திருந்த வாக்குறுதிகள் நிறைவேறுகின்ற காட்சிகள் ஒவ்வோர் இடத்திலும் நமக்கு தென்படுகின்றன.

சுயமே அல்லாஹ் உள்ளங்களைத் திறப்பது தொடர்பான இன்னொரு சம்பவத்தைக் கூறுகின்றேன். எகிப்தைச் சார்ந்த நண்பர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் சரியான எளிமையான விளக்கத்தை தந்தமைக்காக நான் உங்களை பாராட்டுகின்றேன். நீங்கள் எடுத்துக் கூறுகின்ற இஸ்லாமே அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடை –யாகத் தோன்றிய ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எடுத்துக் கூறிய உண்மையான இஸ்லாம் ஆகும். நாங்கள் தாயிஷ் தீவிரவாதிகளால் மற்றும் அவர்களது செயலால் சோர்வடைந்து விட்டோம். அந்தோ! எங்கள் எல்லாரது சிந்தனையும் உங்களைப் போன்றே ஆகி விட்டால் எப்படி இருக்கும்!

இவர் கூறுகின்றார்: நான் நிகழ்ச்சியில் கூறப்பட்ட வழிமுறைக்கேற்ப இரண்டு ரக்அத்துகள் இஸ்திகாரா தொழுகையைத் தொழுதேன். அதே இரவில் கனவில் எனது வீட்டிற்கு முன்பு இருந்த எல்லா வீடுகளும் விலகிச் செல்வதைப் பார்த்தேன். எதுவரையென்றால் எனது வீட்டிற்கு முன்பு காலியான இடமாக ஆகி விட்டது. பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டைப் பார்த்தேன். அதனை உங்களது நிகழ்ச்சிகளில் Back Screen –ல் காட்டிக் கொண்டேயிருக்கின்றீர்கள். அதாவது காதியானில் உள்ள தாருல் மஸீஹை கூறுகின்றார். அதை நான் கனவில் பார்த்தேன். நான் இந்த வீட்டை அதாவது தாருல் மஸீஹ் இருக்கின்ற பகுதியை பூமியிலிருந்து ஒரு செடி போல் முளைத்து வருவதைப் பார்த்தேன். இது எவ்வாறு வெளியில் வருகின்றது என்று நான் வியப்படைந்தேன். பிறகு நான் அதிலிருந்து ஒளி வெளியேறுவதைப் பார்த்தேன். பிறகு நான் சந்திரன் பகலில் வந்திருக்கின்றது என்று மக்கள் கூறுவதைக் கேட்டேன். அப்போது எனக்கு பின்னால் நான் பார்த்தபோது சூரியனும் உதித்திருந்தது. சூரியனும் சந்திரனும் வெளியில் வந்து விட்டது என்று நான் அந்த மக்களிடம் கூறுகின்றேன். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஏனென்றால், முதல் முறையாக நான் இஸ்திகாரா செய்தேன். அல்லாஹ்விடமிருந்து பதிலைப் பெற்றேன். நான் ஆரம்பத்திலிருந்தே முஸ்லிமாக இருந்தும் முதல் முறையாக நான் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுகின்றேன். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் காரணமாக மட்டும் எனக்கு கிடைத்திருக்–கின்றது. நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்–வதற்காக அல்லாஹ் உள்ளத்தைத் திறந்தது தொடர்பான இன்னொரு சம்பவமாகும். இதைப் பற்றி சிரியாவைச் சார்ந்த ஒரு நண்பர் அஹ்மது தர்வேஷ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் முஸ்லிமாக இருந்தேன். ஆனால் மார்க்கத்தை விட்டு விலகியிருந்தேன். 2008 –ல் எனது சகோதரர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். மார்க்கத்தை விட்டு விலகியிருந்தும்கூட எனது சகோதரரின் இந்த செயலால் எனக்கு கடுமையான கோபம் வந்தது. நான் எனது சகோதரருடன் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டேன். பெரும்பாலும் அவருடன் சண்டை இருந்து வந்தது. இறுதியில் எனது சகோதரர் என்னை விட்டு விட்டு தனியாகப் பிரிந்து சென்று விட்டார்.

அவர் கூறுகின்றார்: 2011 –ல் சிரியாவின் நிலைமைகள் மோசமானது. நான் சிரியா அரசாங்கத்திற்கு எதிராக இருந்த பிரிவினருடன் சேர்ந்து கொண்டேன். இந்த தருணத்தில் சிரியா சமூகத்திலிருந்து வந்த எல்லா மார்க்கங்களின் ஜமாஅத்தையும் பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இவற்றில் ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவை காஃபிர் என்று கூறுகிறது என்ற முடிவுக்கு நான் வந்தேன். ஒவ்வொருவரது கொள்கையிலும் தலையும் வாலும் இல்லாத விஷயங்கள் இருந்தன.

அவர் கூறுகின்றார்: நிலைமைகள் மோசமானதன் காரணமாக எங்கள் குடும்பத்தினர் ஹல்ஃப் நகரத்தின் கிராமப்புற பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றனர். எனக்கு எனது சகோதரருடன் மீண்டும் மார்க்க விஷயங்கள் தொடர்பாக வாக்குவாதம் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், நான் அவரிடம் ஏதாவதொரு விஷயம் தொடர்பாக கேட்கும்போதெல்லாம் அதற்கு அவர் கூறிய பதில் என்னை வியப்படையச் செய்தது. இந்த பிரச்சனைக்கு எனது அஹ்மதி சகோதரர் கூறுகின்ற இதுதான் பொருத்தமான பதிலாகும் என்று உள்ளத்தால் கூறும் நிர்பந்தத்திற்கு நான் ஆளானேன். ஆனால் எதிர்ப்பின் கடுமையின் காரணமாக நான் உண்மையான விஷயத்தைக் கூறாமல் இருந்தேன்.

அவர் கூறுகின்றார்: எங்களது உரையாடல் தொடர்ந்து நீடித்த நிலையில் ஹஸ்ரத் ஈஸா

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)*

**முஹம்மது ஆதில்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.*

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

(அலை) அவர்களின் மரணம் தொடர்பான விஷயத்தை எட்டியது. முதன் முதலாக இந்த உரையாடலுக்குப் பிறகு நான் எனது சகோதரரிடம் ஜமாஅத்தின் சில நூல்களைக் கேட்ட சந்தர்ப்பமாக அது இருந்தது. அப்போது எனது சகோதரர் அந்த எல்லா நூல்களும் குண்டுகள் விழும் என்ற அச்சத்தில் நான் விட்டு விட்டு வந்த அந்த வீட்டில்தான் இருக்கின்றது என்று கூறினார். போரின் காரணத்தால் இவர்கள் வீட்டை விட்டு விட்டு வந்து விட்டனர்.

இவர் கூறுகின்றார்: குண்டு வீச்சு, தீவிரவாதம் மற்றும் இரத்தம் சிந்துதல் ஆகியவை நிறைந்து காணப்பட்ட அந்தப் பகுதிக்கு நான் சென்றேன். இவை எல்லாம் அங்கு நடக்கின்றது என்றாலும் நூல்கள் அங்கு இருக்கின்றன என்பதால் நான் இந்த எல்லா அபாயத்தையும் சந்திக்கத் தயாராகி விட்டேன். பிறகு அங்கு சென்று அந்த நூல்களைக் கொண்டு வந்தேன். திரும்பி வந்து நான் அந்த நூல்களைப் படிக்க ஆரம்பித்தேன். எதுவரையென்றால் உள்ளத்தால் நான் அஹ்மதியாகி விட்டேன். எனது சகோதரருக்கும் அது பற்றி தெரிவித்தேன். ஆனால் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்ததால் எனது பைஅத் கடிதத்தை அனுப்ப முடியாமல் இருந்தது.

இவர் கூறுகின்றார்: நான் முதலில் சிரியான அரசாங்கத்திற்கு எதிராக இருந்து வந்த பிரிவுடன் இணைந்து அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தேன். நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, இது தொடர்பாக கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நிகழ்த்திய குத்பாக்களைக் கேட்ட பிறகு உடனடியாக அரசாங்கத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடுவதை விட்டு விட்டேன்.

இவர் கூறுகின்றார்: நான் பைஅத் செய்ததனால் எனது தந்தையார் என் மீது கடுமையாக வெறுப்படைந்தார். ஒருநாள் கடுமையான கோபத்தில் இங்கிருந்து சென்று விடுங்கள். இறைவன் உனது முகத்தை எனக்கு காட்டாமல் இருக்கட்டும்; ஒருபோதும் இறைவன் திரும்பவும் உன்னை என்னிடம் கொண்டு வராமல் இருக்கட்டும் என்று எனது தந்தை கூறினார். எனது ஈமானுக்கு எதிரில் தந்தையாரின் இந்த சொற்களுக்கு எந்த மதிப்பும் இருக்கவில்லை. அல்லாஹ்வின் அருளால் நான் அதன் உணர்வுப்பூர்வமான தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருந்தேன். பிறகு நாங்கள் இடம் பெயர்ந்து துருக்கி வந்து விட்டோம். இங்கு வந்ததும் முதல் வேலையாக நான் செய்தது பைஅத் படிவத்தை நிரப்பி அதை தங்களுக்கு அனுப்பி வைத்ததாகும் என்று இவர் கூறுகின்றார்.

அல்லாஹ் எந்த வழிமுறை மூலமாக எதிரிகளின் தந்திரங்களை முறியடித்து மக்களின் உள்ளங்களைத் திருப்பதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றான்?

மொரோக்கோவைச் சார்ந்த ஒரு நண்பர் அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் இது தொடர்பான சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்: நான் ஆராய்ச்சி செய்து பார்த்த பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத் இறைவனின் ஜமாஅத் ஆகும் என்ற முடிவுக்கு வந்தேன். ஆனால், ஒரு ஆட்சேபனைக்கான பதிலைத் தேடியவாறு எனக்கு ஜமாஅத்தின் அரபு Website –ல் மின்ஹாஜுத் தாலிபீன் என்ற பெயரில் எனக்கு ஒரு நூல் கிடைத்தது. அந்த புத்தகத்தின் பொருளடக்கத்தைப் படித்ததுமே எனக்கு அந்த நூலை வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் உருவானது. இந்த புத்தகத்தின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சில மக்களது ஆட்சேபனைகளுக்கு பதில் கூறியுள்ளார்கள். அவர்கள் அன்னாரைப் பற்றி இவர் எதுவும் செய்யாமல் வெறுமனே அமர்ந்திருக்கின்றார் என்று கூறினர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஆட்சேபனை செய்தவர்களுக்கு பதில் கூறும் வகையில் காலையில் எழுந்ததிலிருந்து மாலை வரை, பிறகு இரவு வரை நான் என்ன செய்கின்றேன் என்பதை விளக்கியவாறு, தான் ஈடுபடுகின்ற அன்றாட அலுவல்கள் பற்றி எடுத்துக் கூறியிருந்தார்கள்.

மொரோக்காவைச் சார்ந்த இவர் எழுதுகின்றார்: ஒருபுறம் நான் இந்த நூலைப் படித்துக் கொண்டே சென்றேன். மறுபுறம் எனது எண்ணத்தில் தஃப்ஸீரே கபீர் வந்து கொண்டிருந்தது. எவரது அன்றாட அலுவல்கள் இந்த அளவு அசாதாரணமான பணிகளால் நிறைந்து காணப்படுகின்றதோ அவர் தஃப்ஸீரே கபீர் போன்ற ஆழமான அறிவைக் கொண்டிருக்கின்ற ஆராய்ச்சி செய்கின்ற பணியை எவ்வாறு செய்ய முடியும்? என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன்.

இவர் கூறுகின்றார்: ஒருவேளை மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி பொய்யராக இருந்தாலும் கூட அவர் தனது மகனை இதுபோன்ற கடினமான பணியில் ஏன் ஆழ்த்தினார்? மிர்ஸா சாஹிப் பொய்யராக இருந்தால் அவரது மகன் இரவு பகலாக இஸ்லாத்தின் வெற்றிக்காக திருக்குர்ஆன் கருவூலங்களை எடுத்து அவற்றை உலகத்திற்கு முன்னால் வைப்பதில் இந்த அளவு ஏன் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும்? இந்த ஜிஹாதில் தன்னைப் பற்றிய கவலை அவருக்கு இல்லை. தனது மனைவி மக்களைப் பற்றிய கவலையும், தனது உடல்நலத்தைப் பற்றிய கவலையும் அவருக்கு இல்லை. இவ்வாறு நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது எனது மூளையில் பெருமானார் (ஸல்) அவர்கள் செய்திருந்த அந்த முன்னறிவிப்பு வந்தது. அந்த முன்னறிவிப்பில் பெருமானார் (ஸல்) அவர்கள் வர வேண்டிய மஸீஹ் வரும்போது அவர் திருமணம் முடிப்பார். அவருக்கு அசாதாரணமான சந்ததிகள் பிறப்பர் என்று கூறியிருந்தார்கள். நான் இந்த முன்னறிவிப்பைப் பற்றி சிந்தனை செய்த போது எனது உள்ளம் எத்தகைய வியக்கத்தக்க வினோதமான உணர்வுகளால் நிரம்பியது என்றால் அதை எடுத்துக் கூறுவதற்கு என்னிடம் சொற்கள் இல்லை. இறைவனது வார்த்தைகளைப் பற்றி புரிகின்ற திறன் இந்த கம்பீரமிக்க வீரர் மூலமாகவே பரப்பப்பட்டது என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. மேலும் தஃப்ஸீரே கபீர் என்ற மகத்தான விரிவுரை வெளி வந்தது. அதற்கு இணையாக எதுவுமே இல்லை. மின்ஹாஜுத் தாலிபீன் என்ற நூலின் அந்தப் பகுதியைப் படித்த பிறகு பைஅத் செய்கின்ற வழியில் தடையாக இருந்த விஷயங்கள் விலகிச் சென்று விட்டன. நான் திறந்த உள்ளத்துடன் பைஅத் செய்வதற்கு ஆயத்தமானேன். அல்லாஹ்வும் வியக்கத்தக்க வழிமுறைகள் மூலம் வழியைத் திறக்கின்றான்.

பிறகு ஆன்மீகக் கனவுகள் மூலமாக சுயமே அல்லாஹ் எவ்வாறு வழிகாட்டுகின்றான்? இது தொடர்பாக யமனிலிருந்து ஒரு பெண்மணி எழுதுகின்றார்: சிறு வயதிலிருந்தே எனக்கு இமாம் மஹ்தி தோன்றும் அந்த காலம் வரை உயிருடன் இருக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அதற்காக நான் துஆவும் செய்தேன். ஒருநாள் நான் ஓர் அரபி சேனலைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு மார்க்க நிகழ்ச்சியில் பிரபல்யமான ஒரு மவ்லவியிடம் ஒருவர், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெயரைக் கூறாமல் இமாம் மஹ்தி வந்து விட்டதாகவும், அவருக்குப் பிறகு கிலாஃபத் நிலைபெற்றிருப்பதாகவும் சிலர் வாதம் புரிகின்றனர். அதுபற்றி தங்களது கருத்து என்ன என்று கேட்டார். அதற்கு மவ்லவி சாஹிப் இந்த மக்கள் பொய்யான யூகங்களுக்கு இரையாகி விட்டனர். இவர்கள் பொய்யர் ஆவர். இவர்களது சுழற்சியில் சிக்குவதற்குப் பகரமாக உங்களது அன்றாட வாழ்க்கையைக் கழியுங்கள். இமாம் மஹ்தி வருகின்றபோது எல்லாருக்கும் அது பற்றி தெரிந்து விடும். அவரைத் தேட வேண்டிய அவசியம்


**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

93600 05888
78716 00664

**IBR**
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

இருக்காது என்று அவர் கூறினார். இந்த விஷயம் எனது மூளையில் பதிந்து விட்டது.

பிறகு 2009 –ல் ஒருநாள் எனது தம்பி என்னிடம் நான் ஒரு சேனலைப் பார்த்தேன். அதில் சில மக்கள் இமாம் மஹ்தியின் தோற்றம் நிகழ்ந்து விட்டது தொடர்பாக அறிவிப்பு செய்கின்றனர் என்று கூறினார். இதைக் கேட்டதும் எனக்கு நான் ஏற்கனவே குறிப்பிட்ட மவ்லவி சாஹிபிடம் கேட்கப்பட்ட கேள்வி மற்றும் அவர் அதற்கு கூறிய பதில் நினைவிற்கு வந்தது. உண்மையில் கேள்வி இமாம் மஹ்தி தோன்றி விட்டதாக அறிவிப்பு செய்து விட்ட இந்த ஜமாஅத் பற்றியதாகும் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

இந்த பெண்மணி கூறுகின்றார்: நான் எனது தம்பியிடமிருந்து இந்த சேனலின் Frequency –ஐப் பெற்றுக் கொண்டேன். பிறகு சேனல் எனக்கு கிடைத்தது. அதில் அல்ஹிவாருல் முபாஷிர் என்ற நிகழ்ச்சி வந்து கொண்டிருந்தது. நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒவ்வொருவரையும் மிகவும் ஆழமான பார்வையுடன் பார்த்தேன். அவர்களது முகங்களில் வியக்கத்தக்க பிரகாசமும் ஒளியும் இருந்தது. அவர்களைப் பார்த்து எனக்கு வருத்தமாக இருந்தது. இவ்வளவு புரியும் திறன் கொண்ட மக்களாக இருந்தும் இவர்கள் வழி தவறிச் சென்று விட்டனர் என்று நான் கருதினேன். இன்று ஒற்றுமையின் தேவையே இருக்கின்றது. ஆனால் இவர்கள் வந்து இன்னொரு பிரிவை ஏற்படுத்தி விட்டனர். இதற்கு முன்னர் இஸ்லாத்தில் பிரிவுகள் குறைவாகவா இருந்தன? இத்தகைய உணர்வு இருந்தும் கூட இவர்கள் கூறிய விஷயங்களை நான் கேட்ட போது அது எனது உள்ளத்தை தொட்டது. ஒருபுறம் ஏன் இந்த பிரிவை ஏற்படுத்தினர் என்ற சிந்தனையும் இருந்தது. மறுபுறம் அவர்கள் கூறிய விஷயமும் நன்றாக இருந்தது.

இந்த பெண்மணி கூறுகின்றார்: இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு ஒரு கஸீதா பாடப்பட்டது. அது தொடர்பாக இது ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களால் எழுதப்பட்டதாகும் என்று எழுதப்பட்டிருந்தது. இந்த கஸீதாவின் சொற்களும் அது ஏற்படுத்திய தாக்கமும் அசாதாரணமானதாக இருந்தது. நான் எனது கணவருடன் இந்த சேனலைப் பார்க்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு நாளும் இந்த சேனலுடன் எங்களுக்கு இருந்த பற்று அதிகரித்து வந்தது. எதுவரையென்றால், சில நாட்களுக்குள் எங்கள் வீட்டில் ஏனைய எல்லா சேனல்களும் நிறுத்தப்பட்டது. M.T.A மற்றுமே இயங்கி வந்தது. வீட்டில் ஒவ்வொரு நபரும் இந்த சேனலில் உள்ள விஷயங்களை புரிந்து கொள்வதை விரும்பினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய சொற்களின் தாக்கமே வியக்கத்தக்கதாக இருந்தது. அன்னாரது கஸீதாவை கேட்கின்ற போது எனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது. ஏனென்றால், இந்த சொற்கள் இறைவன் புறமிருந்து வந்துள்ள ஒரு நபரது வாயிலிருந்தே வெளி வர முடியும். அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பொருட்செறிவுள்ள வார்த்தைகளைக் கூறுவது ஒரு சாதாரண மனிதனின் சக்திக்கு உட்பட்ட விஷயமல்ல.

இந்த பெண் கூறுகின்றார்: எவ்வாறிருப்பினும் எல்லா விஷயங்களைப் பற்றியும் மனநிறைவு ஏற்பட்ட பிறகு நான் ஜனவரி 2010 –ல் பைஅத்திற்கான கடிதத்தை எழுதி விட்டேன்.

பிறகு கூறுகின்றார்: எனது கணவருக்கு இன்டர்நெட் மூலமாக கடிதம் அனுப்புவதற்கு நான் முயற்சி செய்தேன். ஆனால் அதில் எனக்கு வெற்றி கிடைக்கவில்லை. அவ்வாறு வெற்றி கிடைக்காமல் இருந்த சமயத்தில் சிறு வயதில் நான் கண்ட கனவு ஒன்று என் நினைவுக்கு வந்தது. அந்தக் கனவில் புற்பூண்டுகள் இல்லாத ஒரு நிலத்தில் எனக்கு என் முன்னால் ஒரு நீண்ட நிழல் தெரிகிறது. அது தொடர்பாக கனவிலேயே இது பெருமானார் (ஸல்) அவர்களின் நிழலாகும் என்ற உணர்வு ஏற்படுகின்றது. இந்த நிழல் என் பக்கம் தனது கையை நீட்டுகின்றது. அதை பிடிப்பதற்காக நான் ஓடுகின்றேன். இதே ஈர்ப்பில் சில சமயங்களில் நான் விழுந்து விடுகின்றேன். பிறகு எழுந்து ஓடுகின்றேன். பிறகு எனது கண்கள் திறந்தன.

பிறகு இவர் கூறுகின்றார்: இந்த கனவில் பெருமானார் (ஸல்) அவர்களின் நிழல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆவார்கள். அன்னார் நிழலான முறையில் பெருமானார் (ஸல்) அவர்களின் சிறப்புகளின் பிரதிபலிப்பாக இருக்கின்றார்கள். நிழலான நபியாக அவர்கள் இருக்கின்றார்கள். அந்த இறைவன் முயற்சி செய்து அன்னாரின் கைகளைப் பிடிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்கியிருப்பது அவனது பேருளாகும். ஏனென்றால் பல முயற்சிகளும் தோல்வியடைந்த பிறகு இறுதியில் மார்ச் 2010 –ல் நாங்கள் பைஅத் கடிதத்தை அனுப்புவதில் வெற்றி பெற்றோம். பைஅத் செய்த நாளிலிருந்து இறைவனது அருள்கள் மழையைப் போன்று இறங்குகின்றன. அவனது வல்லமையின் அற்புதங்கள் எந்த அளவுக்கு தெரிகின்றன–வென்றால் அவற்றை நமது நாவுகளால் எடுத்துக் கூறுவது இயலாத காரியமாகும். உண்மையிலேயே அவன் அற்புதங்களைக் கொண்ட இறைவன் ஆவான். எப்போது துஆ செய்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அடையாளத்தை நாங்கள் கண்டோம். நமது இறைவன் மிகவும் கருணை காட்டுபவனாவான்.

தொடர்ந்து எனக்கு எழுதுகின்றார்: உங்கள் மீதுள்ள அன்பும் அனைத்து நம்பிக்கை கொண்டவர் மீதுள்ள அன்பும் என்னுடைய ஆன்மா, சந்ததிகள் மற்றும் எல்லா மக்களை விடவும் குளிர்ந்த நீரை விடவும் அதிகமாக ஆகி விட்டது.

எனவே, இறைவன் எதிர்ப்புகள் இருந்தும் கூட ஷைத்தானிய தாக்குதல்களிருந்தும் கூட நல்லியல்பு கொண்ட மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டே இருக்கின்றான். அவர்களது நெஞ்சங்களைத் திறக்கின்றான். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகின்றான். இத்தகைய எண்ணற்ற சம்பவங்கள் நம் முன்னால் வருகின்றன. அல்லாஹ்வே மக்களைப் பிடித்து அவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அவன் ஆதரவாக நின்று அவர்களுக்கு உதவி செய்கின்ற காட்சிகளைக் காட்டுகின்றான். உலகம் துண்டிக்கப்படுகின்ற அந்த நாள் வரை இறைவன் உமது பெயரை கண்ணியத்துடன் நிலைத்து நிற்கும்படி செய்வான். உமது பிரச்சாரத்தை பூமியில் எல்லைகள் வரை எட்ட


halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222


## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)*

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.


Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com



S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
◗ Panchagavya
◗ Pest Repeller
◗ See Veed Extract
◗ All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.


## திருக்குர்ஆனிலிருந்து...

*மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

வைப்பான் என்று இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறியிருந்தான். பிறகு அவர்களை நோக்கி எவர்கள் உம்மை இழிவுபடுத்த வேண்டும் என்ற கவலையில் இருக்கின்றனரோ, உம்மை தோல்வியடைய செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலும் உம்மை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் இருக்கின்றனரோ அவர்கள் சுயமே தோல்வியடைவர். அவர்களது ஆசை நிறைவேறாமல் தோல்வியடைந்து அவர்கள் மரணிப்பர் என்று கூறினான். பிறகு கலப்பற்ற தன்மையுடன் உம்மை உள்ளத்தால் நேசிப்பவர்களின் பிரிவை வளர்ச்சியடையச் செய்வேன். அவர்களது உயிர்களிலும் செல்வத்திலும் அருளை ஏற்படுத்துவேன். அவர்களை அதிகமாக்குவேன். அவர்கள் முஸ்லிம்களின் ஏனைய பிரிவினர்கள் மீது மறுமை நாள் வரை மேலோங்கி இருப்பர் என்று கூறினான். அதாவது முஸ்லிம்களின் மற்ற பிரிவுகளும் இருக்கும். ஆனால் வெற்றி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கே கிடைக்கும் – இன்ஷா அல்லாஹ்.

முஸ்லிம்களின் மற்ற பிரிவுகள் எது? இறைவன் கூறுகின்றான்: அவர்கள் பொறாமை கொள்கின்ற, பகைமை பாராட்டுகின்ற பிரிவினர் ஆவர். மற்றவர்களை அதாவது நம்பிக்கை கொண்டவர்களை இறைவன் மறந்து விட மாட்டான். அவர்கள் தங்களது கலப்பற்ற தன்மைக்கு ஏற்ப தத்தமது நற்கூலியைப் பெறுவர். (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5, பக்கம் 648) அல்லாஹ் இதற்கேற்ப ஒவ்வொரு நாளும் ஜமாஅத்தில் கலப்பற்ற தன்மையுடனும் நன்றியுணர்வுடனும் இணைந்திருப்பதற்கான நல்வாய்ப்பை தூய உள்ளம் கொண்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்திருந்த எண்ணற்ற வாக்குறுதிகள் நிறைவேறுவதை நாம் பார்க்கின்றபோது நமது எண்ணிக்கையை அதிகமாக்குவதாக அவன் செய்துள்ள வாக்குறுதியும் நிறைவேறும் – இன்ஷாஅல்லாஹ். பொறாமை கொள்பவர்கள் மீதும் பகைமை பாராட்டுபவர்கள் மீதும் ஆதாரங்களின் அடிப்படையில் எப்போதும் நாமே மிகைத்து நிற்போம். நீங்கள் கேட்ட பல சம்பவங்களிலும் பல மக்களும் இதைத்தான் கூறியிருக்கின்றனர். ஆதாரங்களின் அடிப்படையில் எதிரிகளிடம் எதுவும் இல்லை. எதிர்ப்பு மட்டுமே இருந்து வருகிறது. வருங்காலத்திலும் ஆதாரங்களின் அடிப்படையில் எப்போதும் நாமே வெற்றி பெறுவோம். தேவைப்படுகின்ற விஷயம் என்னவென்றால் இறைவனின் அருள்களைப் பெறுவதற்கு நாம் கலப்பற்ற தன்மையில் முன்னேறிச் சென்று அதை அதிகரிக்கும்படி செய்ய வேண்டும். அதன் மூலம் நாம் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் (அதாவது எதிரிகள்) தங்களது திட்டங்களாலும், அடிப்படையே இல்லாத பொய்களைக் கூறுவதன் மூலமாகவும், இட்டுக்கட்டி பொய் கூறுவதன் மூலமாகவும், எள்ளி நகையாடி பரிகாசம் செய்வதன் மூலமாகவும் இறைவனது எண்ணத்தை தடுத்து நிறுத்தி விடலாம் என்று எண்ணுகின்றனரா? அல்லது உலகத்தை ஏமாற்றி எதனை இறைவன் விண்ணில் நாடியிருந்தானோ அதனை காலதாமதமாக நிறைவேறும்படி விட்டு விடுவார்களா? உண்மையை எதிர்த்தவர்கள் இதற்கு முன்னர் எப்போதாவது வெற்றி பெற்றிருந்தால் இவர்களும் வெற்றி பெறுவர். ஆனால் இறைவனின் எதிரிகளும் விண்ணில் தீர்மானிக்கப்பட்ட அவனது எண்ணத்திற்கு எதிராக இருப்பவர்களும் எப்போதும் இழிவையும் தோல்வியையும்தான் தழுவுகின்றனர் என்றால், பிறகு இந்த மக்களுக்கும் ஒரு நாளில் இழிவும் தோல்வியும் ஏற்படும். இறைவன் கூறியவை எதுவும் நிறைவேறாமல் இருந்ததில்லை; அது நிறைவேறாமல் இருக்காது.

அவன் கூறுகின்றான்: அதாவது இறைவன் ஆரம்பத்திலிருந்தே இதை எழுதி வைத்து விட்டான். மேலும் அதனை அவன் தனது சட்டமாகவும் நடைமுறையாகவும் ஆக்கியுள்ளான். அதாவது அவனும் அவனது தூதர்களும் எப்போதும் வெற்றி பெறுவர். எனவே, நான் அவனது தூதராகவும் அவனால் அனுப்பப்பட்டவனாகவும் இருக்கின்றேன். ஆனால் எந்த புதிய ஷரீஅத்துடனும் புதிய வாதத்துடனும் புதிய பெயருடனும் நான் வரவில்லை. மாறாக அதே நபியான காத்தமுல் அன்பியாவின் பெயரைப் பெற்று அவரோடு இணைந்து அவரது தோற்றமாக நான் வந்துள்ளேன். எனவேதான் நான் கூறுகின்றேன். தொன்மையிலிருந்தே அதாவது ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை எப்போதும் இந்த வசனத்தின் கருத்து உண்மையாக இருந்திருக்கின்றது. அவ்வாறே இப்போதும் இந்த வசனத்தின் கருத்து எனக்கு சாதகமாக இருந்து அதன் உண்மையை வெளிப்படுத்தும் – இன்ஷா அல்லாஹ். (நுஸூலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18, பக்கம் 380-381)

★ ★ ★ ★ ★


**ரஹ்மானியா**
**மேல்நிலைப் பள்ளி**
**தொடக்கப் பள்ளி**
**மெட்ரிகுலேஷன் பள்ளி**
மேலப்பாளையம், திருநெல்வேலி.
**S.S. அஸன் அபூபக்கர்**
**✆ 94869 37769**


**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*


**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....*


**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525


**திருக்குர்ஆனிலிருந்து...**

*(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*


**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219


**திருக்குர்ஆனிலிருந்து...**

*பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)*


**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*


**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையைக் கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவார்.*


**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் பெரும்பாலாரிடம் இந்த சிந்தனை காணப்படுகிறது. எவ்வாறு தமது குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பது என்ற கவனம் ஏற்படுகிறது அல்லது குறைந்தபட்சம் கவலை இருக்கிறது. இது அல்லாஹ்வின் மிகப்பெரும் அருளும் கருணையும் ஆகும். அதாவது, அஹ்மதிகளிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணத்தால் நமது சிந்தனைகள் இக்காலத்தில் உலக விருப்பங்கள் ஒவ்வொருவரையும் சூழ்ந்திருக்கின்ற நிலையிலும் அவர்கள் தமது பிள்ளைகளின் தர்பிய்யத்திற்காக மட்டும் கவலைப்படுவதில்லை. மாறாக அவர்களது மார்க்க முன்னேற்றத்தைப் பற்றிய எண்ணமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் முஸ்லிம்களாகிய நம் மீது இந்த கருணையும் காட்டியுள்ளான். நிபந்தனை என்னவெனில் முஸ்லிம்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு செயல்படுபவர்களாக இருக்க வேண்டும். திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் குழந்தை பிறப்பிற்கு முன்பிருந்து தர்பிய்யத்தின் பல்வேறு கட்டங்களை குழந்தைகள் கடக்கின்ற வரை அதற்காக துஆவும் கற்றுத் தரப்பட்டுள்ளது. அதற்கான தர்பிய்யத்தின் வழிமுறையும் கூறப்பட்டுள்ளது. பெற்றோரின் பொறுப்புகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. நாம் இந்த துஆவை செய்பவர்களாகவும், இதற்கேற்ப வாழ்வை கழிப்பவர்களாகவும் இருப்போம் என்றால், ஒரு நல்ல சந்ததியை நமக்கு முன் அனுப்புபவர்களாக இருப்போம்.

சந்ததிகள் நல்லவர்களாக விளங்கவும் காலத்தின் தீய தாக்கத்திலிருந்து தப்பிக்கவும் குழந்தைகள் பிறக்கும் முன்பே குழந்தைகளின் விருப்பத்திற்கு முன்பே ஆணும் பெண்ணும் நன்மைகளை செய்பவர்களாக விளங்க வேண்டும் என்பது அவசியமான ஒன்றாகும்.

சந்ததிகளுக்காக துஆ செய்யும்போது அல்லாஹ்வுடைய கட்டளைகளின் படி அமல் செய்வதும் மற்றும் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்படுவதும் அவசியமாகும். அப்போதுதான் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆகவே தாயும் தந்தைக்கும் இதில் மிகப்பெரும் பொறுப்பு உள்ளது. குழந்தைகளின் சீர்திருத்தத்திற்காகவும், அவர்களின் தர்பிய்யத்திற்காகவும் நிரந்தரமாக அல்லாஹ்விடம் சந்ததிகளின் மேம்பாட்டிற்காகவும் துஆ கேட்டுக் கொண்டிருங்கள். உங்கள் முன்மாதிரியை சந்ததிகளுக்காக நிலைநாட்டுங்கள். உங்கள் முன் மாதிரி அல்லாஹ் தந்த அந்த போதனைக்கு எதிராக இருந்தால், உங்கள் செயல், தாய் தந்தையர் பிள்ளைகளுக்கு தருகிற அறிவுரைக்கு எதிராக இருந்தால் பிறகு சீர்திருத்தத்திற்கான துஆவில் நல்ல நிய்யத் இருக்காது. இவ்வாறான அமல்கள் இருக்கும்போது, நாங்கள் எங்கள் சந்ததிகளுக்காக நிறையவே துஆ செய்திருந்தோம். இருந்தும் கூட அவர்கள் தடம் புரண்டு போய் விட்டனர் அல்லது எங்களை சோதனையில் இட்டு விட்டனர் என்று முறையிடுவதும் தவறாகும்.

வக்ஃபே நவ்வின் பெற்றோர் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். தமது பிள்ளைகளுக்கு மார்க்கத்தின் பக்கம் கவன மூட்ட வேண்டும்.

வாகிஃபீனே நவ் ஜமாஅத்திற்கு அவர்களின் தேவை இருக்கிறதா? இல்லையா? என்று முதலில் ஜமாஅத்திடம் கேட்க வேண்டும். அவர்கள் தமது சொந்த வேலையை செய்து கொள்வதற்கு ஜமாஅத் அனுமதி அளித்தால் செய்யுங்கள். அது அல்லாமல் அவர்கள் களங்கமற்ற முறையில் தமது உடன்படிக்கையையும் பெற்றோரின் உடன்படிக்கையையும் நிறைவேற்றியவாறு தம்மை வக்ஃபிற்காக அர்ப்பணித்து விட வேண்டும்.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 14 ஜூலை 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **26 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அதிகமான ஆண்களும் பெண்களும் எழுதுகின்றனர். என்னை சந்திக்கும்போதும் கூறுகின்றனர். எங்களுக்கு குழந்தை பிறக்க உள்ளது. அதற்காக துஆ செய்யுங்கள் அல்லது பிறக்கப் போகிற இந்த குழந்தைக்காக நாங்கள் என்ன துஆ செய்ய வேண்டும்? அல்லது எங்களது பிள்ளைகள் குழந்தைப் பருவத்தை விடுத்து வாலிபப் பருவத்தை அடைகிறார்கள். அவர்களின் தர்பிய்யத்தைக் குறித்த கவலை உள்ளது. அவர்களுக்காக நாங்கள் என்ன துஆ செய்ய வேண்டும்? எங்கள் பிள்ளைகள் சரியான வழியில் நல்ல வழியில் நிலை நிற்பதற்கு நாங்கள் எவ்வாறு தர்பிய்யத் கொடுக்க வேண்டும் என்றும் கேட்கின்றனர்.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் பெரும்பாலாரிடம் இந்த சிந்தனை காணப்படுகிறது. எவ்வாறு தமது குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பது என்ற கவனம் ஏற்படுகிறது அல்லது குறைந்தபட்சம் கவலை இருக்கிறது. இது அல்லாஹ்வின் மிகப்பெரும் அருளும் கருணையும் ஆகும். அஹ்மதிகளிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணத்தால் நமது சிந்தனைகள் இக்காலத்தில் உலக விருப்பங்கள் ஒவ்வொருவரையும் சூழ்ந்திருக்கின்ற நிலையிலும் அவர்கள் தமது பிள்ளைகளின் தர்பிய்யத்திற்காக மட்டும் கவலைப்படுவதில்லை. மாறாக அவர்களது மார்க்க முன்னேற்றத்தைப் பற்றிய எண்ணமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் முஸ்லிம்களாகிய நம் மீது இந்த கருணையும் காட்டியுள்ளான். நிபந்தனை என்னவெனில் முஸ்லிம்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு செயல்படுபவர்களாக இருக்க வேண்டும். திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் குழந்தை பிறப்பிற்கு முன்பிருந்து தர்பிய்யத்தின் பல்வேறு கட்டங்களை குழந்தைகள் கடக்கின்ற வரை அதற்காக துஆவும் கற்றுத் தரப்பட்டுள்ளது. அதற்கான தர்பிய்யத்தின் வழிமுறையும் கூறப்பட்டுள்ளது. பெற்றோரின் பொறுப்புகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. நாம் இந்த துஆவை செய்பவர்களாகவும், இதற்கேற்ப வாழ்வை கழிப்பவர்களாகவும் இருப்போம் என்றால், ஒரு நல்ல சந்ததியை நமக்கு முன் அனுப்புபவர்களாக இருப்போம். குழந்தைகளின் தர்பிய்யத் என்பது எளிய காரியமல்ல என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பாக அதுவும் இக்காலத்தில், அடிக்கு அடி ஷய்த்தானால் உருவாக்கப்பட்ட மனமகிழ்வுக்–குரிய விஷயங்கள் பல்வேறு கோணத்தில் நமக்கு முன் வந்து கொண்டிருக்கிற நிலையில் இது மிகவும் சிக்கலான பணியேயாகும். ஆனால் அல்லாஹ் துஆவையும் அதற்கான வழியையும் கூறியும் இருக்கிறான். நாமும் நமது பிள்ளைகளும் ஷய்த்தானிடமிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக அதனை வழங்கியிருக்கிறான். ஆனால் இதற்காக தொடர்ந்து துஆவும் அல்லாஹ் உடைய உதவி மற்றும் நமது முயற்சியும் அவசியம் ஆகும். தொடர்ச்சியான ஒரு ஜிஹாதிற்கான தேவை உள்ளது. உண்மையான முஃமினிடம் எதிர்பார்க்கப்படுவது என்னவென்றால், அவர் அல்லாஹ்வுடன் தம்மை இணைத்துக் கொண்டு தம்மையும் தமது பிள்ளைகளையும் ஷய்த்தானுடைய தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். அது அல்லாமல் அவநம்பிக்கை அடைந்து சோர்ந்துபோய் விடக் கூடாது. பயந்து போய் எதிர்மறை சிந்தனைகளை தன் மீது ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

எதிர்மறை சிந்தனைக்கு ஒரு கவலை தரும் உதாரணமாக கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு கடிதம் எனக்கு வந்தது. ஒரு மனிதர் எழுதி இருந்தார். இக்காலத்தில் உலகில் பணத்திற்கான ஓட்டம் அதிகமாக உள்ளது. ஒழுக்கக்கேடான

செயல்கள் அதிகமாக நடக்கின்றன. போதைகளின் புதிய புதிய வகைகளும் அதன் பயன்பாடுகளும் சகஜமாகிக் கொண்டிருக்கின்றன. சமுதாயத்தில் பொதுவான வழிகேடு அதிகமாகிக் கொண்டிருக்–கிறது. எனவே அவர் எழுதுகிறார். கண்டிப்பாக திருமணம் செய்யத்தான் வேண்டும். ஆனால் திருமணமாகி விட்டாலும் குழந்தை இல்லாமல் இருப்பதே சிறந்தது என்று நான் நினைக்கிறேன். இது மிகவும் அவநம்பிக்கையான சிந்தனையாகும். ஷய்த்தானிடம் தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டு அவனை எல்லா சக்தியும் உடையவனைப் போல் கருதி இந்த கருத்து கூறப்படுகிறது. சந்ததிகளின் தர்பிய்யத்திற்காக நாம் செய்கிற முயற்சிகளிலும் துஆவிலும் பரக்கத் வழங்குவதற்கு அல்லாஹ்விடம் எந்த சக்தியும் இல்லாதது போன்றும் கூறப்படுகிறது. (நவூதுபில்லாஹ்). அல்லாஹ் நமது சந்ததிகளை ஷய்த்தானுடைய தாக்குதல்களிலிருந்து காப்பானாக. நாம் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் துஆ செய்தாலும் நடக்காது என்பது போன்றும், இன்னொரு வார்த்தைகளில் கூறுவதாயின், ஷய்த்தானின் வலைகளை வீசுவதற்கு அவனுக்கு நாம் முற்றிலும் சுதந்திரம் தந்து விட வேண்டும் என்றும், இவ்வாறு நம்பிக்கை–யாளர்களின் சந்ததிகள் சிறிது சிறிதாக முடிவுக்கு வந்து விட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த சிந்தனை மிகவும் ஆபத்தானதும் அவநம்பிக்யையின் விளைவும் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவரிடம் அத்தகைய சிந்தனை இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எத்தகைய புரட்சியை உருவாக்க உலகில் அனுப்பப்பட்டார்–களோ அதில் பங்கு பெறுவதற்கு நாம் நமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்த வேண்டும். நமது சந்ததிகளிடமும் இந்த ரூஹை ஊத வேண்டும். அது நமது நோக்கம் ஆகும். அதற்காக துஆவும் செய்ய வேண்டும். அவர்களுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும். சமுதாயத்தின் இந்த எல்லா அசுத்தங்கள் இருந்த நிலையிலும் நாம் ஷய்த்தானை வெற்றி பெற விடப் போவதில்லை – இன்ஷா அல்லாஹ். உலகில் இறைவனின் ஆட்சியை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். ஆகவே அவநம்பிக்கை அடைய எந்த காரணமும் இல்லை. மாறாக ஓர் உறுதியுடன் அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைப்படி நடந்து கொள்ள வேண்டும். நான் குறிப்பிட்டது போன்று அல்லாஹ் நல்ல சந்ததிகளுக்காக திருக்குர்ஆனில் துஆ கற்றுத் தந்துள்ளான்.

ஓரிடத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் ஸக்கரிய்யா (அலை) அவர்கள் செய்த துஆவை கற்றுத் தந்தான். அந்த துஆ இதுவாகும்.

رَبِّ هَبۡ لِيۡ مِنۡ لَّدُنۡكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۚ اِنَّكَ سَمِيۡعُ الدُّعَآءِ

எனது இறைவா! உனது சன்னிதியில் இருந்து எனக்கு ஒரு தூய சந்ததியை வழங்குவாயாக. நிச்சயமாக நீ துஆக்களை அதிகமாக கேட்பவன் ஆவாய். (3:39) அல்லாஹ்தான் இந்த துஆவை கற்றுத் தந்துள்ளான். நான் அதிகமாக துஆவை கேட்பவன். நீங்களும், அல்லாஹ்வே! நீ துஆவை கேட்பவன். எனவே எனது துஆவை ஏற்றுக் கொள்வாயாக. எங்களுக்கு தூய சந்ததிகளை வழங்குவாயாக என்று கூறுங்கள் என்றான். எனவே தூய சந்ததிகளுக்கான விருப்பம் இருக்கும் என்றால் அதற்காக துஆவும் செய்ய வேண்டும். அத்துடன் பெற்றோரும் அந்த தூய சிந்தனை மற்றும் நற்செயல்களைக் கொண்டவர்களாக விளங்க வேண்டும். நபிமார்களின் பண்புகளாகிய நன்மைகளை மேற்கொள்வது ஒவ்வொரு தாய் தந்தையருக்கும் கடமையாகும். சில வேளைகளில் தாய்மார்கள் மார்க்க விவகாரங்களில் கவனம் செலுத்துபவர்–களாக இருப்பர். இறைவணக்கம் செய்பவர்களாக இருப்பர். ஆண்கள் அவ்வாறு இருப்பதில்லை. சில இடங்களில் ஆண்கள் சரியாக இருப்பர். பெண்கள் தமது பொறுப்பை நிறைவேற்றுவ–தில்லை. சந்ததிகள் நல்லவர்களாக விளங்கவும் காலத்தின் தீய தாக்கத்திலிருந்து தப்பிக்கவும் குழந்தைகள் பிறக்கும் முன்பே குழந்தைகளின் விருப்பத்திற்கு முன்பே ஆணும் பெண்ணும் நன்மைகளை செய்பவர்களாக விளங்க வேண்டும் என்பது அவசியமான ஒன்றாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உடைய சஹாபாக்களின் சம்பவங்களில் ஒரு சம்பவம் வருகிறது. அதில் குழந்தை பிறப்பிற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒருவர் வேண்டுகிறார். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்வதற்கு ஒரு நிபந்தனை விதித்தார்கள். அம்மனிதர் தமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது அந்த நிபந்தனையாகும். அம்மனிதரோ அப்போது அஹ்மதியாகக் கூட இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பைஅத்தில் வரவும் இல்லை. அவரது நற்செயலின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். முன்ஷி அதா முஹம்மது சாஹிப் பட்வாரி அவர்களே அம்மனிதராவார்.

அவர் கூறுகிறார்: நான் அஹ்மதியல்லாத–வராக இருந்தேன். மார்க்கத்தை விட்டு விலகி இருந்தேன். ஒரு நண்பர் அவருக்கு அஹ்மதிய்யத்தை தப்லீக் செய்திருந்தார். ஆனால் அதில் அவர் கவனம் செலுத்தவில்லை.

அவர் கூறுகிறார்: ஒருமுறை அம்மனிதர் என்னிடம் அதிகமாகவே எடுத்துச் சொன்னார். என்னை பின்தொடர்ந்தார். கேளுங்கள்; சிந்தியுங்கள் என்று கூறினார். நான், நல்லது; நான் உங்களிடம் ஒரு துஆவுக்காக கேட்டுக் கொள்கிறேன். அந்த துஆ கேட்கப்பட்டு விட்டால் நானும் ஆய்வு செய்வேன். நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்று கூறுகிறீர்கள். எனக்காக அவர்களிடம் துஆ செய்யுமாறு கூறுங்கள். துஆ எதற்காக என்றால் எனக்கு மூன்று மனைவிகள் உள்ளனர். எவர் மூலமும் குழந்தைகள் இல்லை. குழந்தை பிறப்பதற்காகவே நான் ஒன்றுக்குப் பிறகு மற்றொன்று என திருமணம் செய்தேன். எனக்கு ஓர் ஆண் குழந்தை வழங்கப்பட வேண்டும். அதுவும் முதல் மனைவி மூலமாக பிறக்க வேண்டும். அதற்காக துஆ செய்யுமாறு கூறுங்கள்.

அவர் கூறுகிறார்: என் சார்பாக அந்த அஹ்மதி கடிதம் எழுதி விட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு மவ்லவி அப்துல் கரீம் சாஹிபிடமிருந்து பதில் வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். பிறகு உங்களுக்கு மகன் வழங்கப்படுவார் என்று கூறினார்கள். ஆனால் நிபந்தனை என்னவெனில் நீர் ஸக்கரியாவுடைய தவ்பாவை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் எழுதியிருந்தார்கள். முன்ஷி சாஹிப் கூறுகிறார்: நான் அந்த நாட்களில் மிகவும் மார்க்கமற்றவனாக இருந்தேன். மது, போதை, லஞ்சம் ஆகியவை எனது தினசரி வேலையாக இருந்தன. ஸக்கரிய்யா உடைய துஆ என்றால் என்வென்று எனக்கு என்ன தெரியும்? அவர் கூறுகிறார்: ஸக்கரியா உடைய துஆ என்றால் என்ன என்று தெரிந்து கொள்வதற்காக மஸ்ஜிதிற்குப் போனேன். மஸ்ஜிதின் இமாம் என்னை பள்ளிவாயிலில் கண்டு வியந்து போனார். இந்த குடிகாரன், தீயவன் எங்கிருந்து வந்தான்? என்று வியந்தார். எவ்வாறிருப்பினும் நான் கேட்ட கேள்விக்கு அவரால் பதில் தர முடியவில்லை.

அவர் கூறுகிறார்: பிறகு நான் மவ்லவி ஃபதஹ்தீன் சாஹிப் அஹ்மதியிடம் கேட்டபோது அவர் கூறினார். மார்க்கமற்ற நிலையை விட்டு விடுங்கள். ஹலாலை உண்ணுங்கள். தொழுகை நோன்பை மேற்கொள்ளுங்கள். பள்ளிவாயிலுக்கு அதிகமாக வந்து கொண்டிருங்கள். இதனைக் கேட்டு நான் அவ்வாறே செய்தேன். குடியை விட்டு விட்டேன். லஞ்சம் வாங்குவதை விட்டு விட்டேன். தொழுகை, நோன்பை கடைபிடித்தேன்.


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.*

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?*

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

நான்கைந்து மாதம் கழிந்திருக்கும். ஒருநாள் எனது மூத்த மனைவி அழத் தொடங்கினாள். அவரை ஒரு செவிலியிடம் பரிசோதிக்கச் செய்தேன். அப்பெண் இவருக்கு குழந்தை பிறக்க வாய்ப்புள்ளதாக சந்தேகத்தை வெளிப்படுத்தி–னார். அவர் கூறியதைக் கேட்டு நான் மிர்ஸா சாஹிபிடம் துஆ செய்ய செய்துள்ளேன். இது குழந்தை பிறப்பதற்கான அடையாளமேயாகும். சந்தேகத்திற்கு ஒன்றுமில்லை என்றேன். சில நாட்களுக்குப் பிறகு கர்ப்பத்தின் அறிகுறிகள் வெளிப்படத் தொடங்கின. எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் அவன் ஆரோக்கியமும் அழகும் உள்ளவனாக இருப்பான் என்றும் மக்களிடம் நான் கூறத் தொடங்கினேன். இவ்வகையில் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குப் பிறகு நான் பைஅத் செய்தேன். அப்பகுதியில் இன்னும் நிறைய பேரும் கூட பைஅத் செய்தனர். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 220-221 அறிவிப்பு எண் 241) அல்லாஹ் ஒருவருக்கு நல்ல முடிவை தர விரும்பினால் இவ்வாறும் நடக்கிறது. குழந்தைக்கான விருப்பம், குழந்தை பிறப்பது ஆகியவை அவரது சீர்திருத்தத்திற்குக் காரணமாக அமைந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் கூட அவருக்கு குழந்தை பிறப்பதற்கு அவரிடம் தூய மாற்றம் ஏற்படுவதை நிபந்தனை ஆக்கினார்கள். எவ்வாறிருப்பினும் நாம் ஸக்கரிய்யா (அலை) அவர்களுடைய துஆவை செய்யும் அதே வேளையில் நமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதும் அவசியமாகும். இது தொடர்பாக நான் இதனையும் கூறுகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இன்னொருவர் வந்தார். எனக்காக துஆ செய்யுங்கள். எனக்கு மகன் பிறக்க வேண்டும் அல்லது குழந்தை பிறக்க வேண்டும். அப்போதுதான் நான் அஹ்மதியாவேன் என்றார்.

அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக நான் இருக்கின்றேன் என்பதே வாதமாகும். மக்களுக்கு குழந்தை பிறக்க வைக்க வந்துள்ளதாக நான் வாதிக்கவில்லை. (மல்.'.பூஸாத் தொகுதி 9 பக்கம் 115; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது) அந்த மனிதருடைய நிலை முற்றிலும் மாற்றமாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபியாக இருக்கிறார்கள். அவரை பற்றிய நிலைமைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு சென்றடைந்தது. இந்த நிபந்தனை அவரது தடுமாற்றத்துக்கே காரணமாக அமையலாம். ஆனால் இங்கு அந்த மனிதருக்கு நல்ல முடிவு கிடைக்க வேண்டியிருந்தது. அவர் நல்லவராகவும் இருந்திருப்பார். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்து விட்டு இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று அறிவித்தும் விட்டார்கள். எனவே இதனை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு காரியத்துக்கும் நிபந்தனை விதிக்கப்படுவ–தில்லை. அவர் அஹ்மதியாவதற்கு துஆ நிபந்தனையாக விதிக்கப்பட முடியாது. சிலர் என்னிடமும் கூட எழுதுகிறார். இவ்வாறு நடந்தால் நாங்கள் அஹ்மதியாவோம். நிபந்தனை விதித்து அஹ்மதியாவது மார்க்கத்தை ஒப்புக்கொள்ளும் காரியமல்ல. மாறாக, தமது நிபந்தனைக்கு அல்லாஹ்வை உட்படுத்துவதாகும். அல்லாஹ் எவரது நிபந்தனையின் படியும் எவருக்கும் நேர்வழி காட்டுவதில்லை. நேர்வழியில் செல்வதற்கு நமக்கு தான் தேவை. அல்லாஹ்வுக்கு நாம் நேர்வழி பெற வேண்டும் என்ற எந்தவொரு தேவையும் இல்லை.

எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று நாம் சந்ததிகளுக்காக துஆ செய்யும் வேளையில் நமக்குள்ளும் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ஸக்கரிய்யா (அலை) அவர்கள் சம்பந்தமாக சூரத்துல் அன்பியாவில் ஒரு குறிப்பு வருகிறது.

رَبِّ لَا تَذَرْنِيْ فَرْدًا وَّاَنْتَ خَيْرُ الْوٰرِثِيْنَ எனது இறைவனே! என்னை தனியாக விட்டுவிடாதே. நீயே வாரிசுகள் அனைவரிலும் சிறந்தவன். (21:90) இந்த துஆவிலும் அல்லாஹ்வே கைருல் வாரிஸீன். வாரிசுகளில் எல்லாம் சிறந்தவனாகக் கூறப்பட்டுள்ளது. குழந்தைகளுக்காக துஆ செய்வது குழந்தை வேண்டும் என்பதற்காக அல்ல என்பது தெளிவானது. உலகியல் விவகாரங்–களுக்கு ஒரு வாரிசு வேண்டும் என்பதல்ல. மாறாக அல்லாஹ்வின் தரப்பிலிருந்து எத்தகைய வாரிசு வேண்டும் எனில் அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர்களாக இருக்க வேண்டும். இத்தகைய துஆவை செய்பவர் தாமும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவராக இருக்க வேண்டும் என்பது வெளிப்படையாகும். மனிதன் தானே உலகில் மூழ்கிக் கிடந்து கொண்டு நல்ல வாரிசை எப்படி கேட்பார்? ஒரு பெண் தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று ஆசைப்படுவது இயல்பான விஷயமாகும் அல்லது சில வேளைகளில் கணவர் விரும்புகிறார் என்பதற்காக குழந்தையை வேண்டுகின்றனர். இதுவே சில வேளைகளில் சோதனைக்குக் காரணமாகி விடுகிறது. குழந்தை–களுக்கான விருப்பம் மிகவும் அனுமதிக்கப்பட்ட விருப்பமேயாகும். அத்துடன் நல்ல வாரிசாகப் பிறக்க வேண்டும் என்பதற்காகவும் துஆ செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாரிசுகளை உருவாக்க வேண்டும் என்பதற்காக மட்டும் குழந்தைகளைப் பெற ஆசைப்பட வேண்டாம். மாறாக, நல்ல சாலிஹான மார்க்கத் தொண்டர்களாக விளங்கும் வாரிசுகள் உருவாகுவதற்காக விருப்பம் கொள்ளுங்கள் என்பதை விளக்கியவாறு சந்ததிகளும் கூட சோதனைக்குக் காரணமாகி விடலாம் என்பதைப் பற்றி ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: சந்ததிகளின் சோதனையும் பெரும் சோதனையாகும். சந்ததிகள் சாலிஹ் ஆனவர்களாக இருந்தால் வேறு எதனைப் பொருட்படுத்த வேண்டும்? இறைவன் தானே கூறுகிறான். وَهُوَ يَتَوَلَّى الصّٰلِحِيْنَ அதாவது அல்லாஹ் தாமே சாலிஹீனுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறான். (7:197) மனிதன் பேறிழந்தவனாக இருந்தால் இலட்சக்கணக்கான ரூபாய்களை அவனுக்கு விட்டுச் சென்றாலும் சந்ததி பேறிழந்தவனாக இருக்கும் நிலையில் இலட்சக்கணக்கான ரூபாய்களை அவனுக்காக விட்டுச் சென்றாலும் அவன் தீய செயல்களில் செலவழித்து அனைத்தையும் தீர்த்து விடுவான். பிறகு அவன் சோதனையில் விழுவது கண்டிப்பானதாகும். எவர் தனது கருத்தை இறைவனுடைய கருத்துடனும் நாட்டத்துடனும் இணக்கமாக ஆக்கிக் கொள்கிறரோ அவர் சந்ததிகளின் தரப்பிலும் மன நிறைவு பெறுவார். அல்லாஹ்வின் கருத்தும் விருப்பமும் என்ன? உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள் என்பதாகும். இது நடந்தால் பிறகு அவர் சந்ததிகளின் தரப்பிலும் மன நிறைவை அடைவார் என்று கூறுகிறார்கள். ஏனெனில் அத்தகைய மனிதர் தனது சந்ததிகளுக்காக துஆவும் செய்வார். தர்பிய்யத்திற்காக முயற்சியும் செய்கிறார். அவர் கூறுகிறார்: அவர் சந்ததிகளின் தகுதிகளுக்காக முயற்சி செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். இந்நிலையில் இறைவன் அவருக்கு பொறுப்பேற்றுக் கொள்வான். தீயவராக இருந்தால் பிறகு நரகத்திற்குப் போய் விட்டார்; பொருட்படுத்தவும் மாட்டார்.

ஓரிடத்தில் அன்னார் நல்ல சந்ததிகளுக்காக அறிவுரை கூறியவாறு தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்கள்: நீங்கள் நல்லவராக இருங்கள். உங்களுடைய சந்ததிகளுக்கு தக்வா மற்றும் நன்மையின் உயர்ந்த முன்மாதிரியாகி விடுங்கள். அவர்களை தக்வா உடையவராகவும் மார்க்க–முடையவராகவும் ஆக்குவதற்கு துஆ செய்யுங்கள். அவர்களுக்காக பொருளை திரட்டி வைப்பதற்காக எந்த அளவுக்கு முயற்சி செய்வீர்களோ அந்த அளவுக்கு இந்த

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
Metro Zone
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.*

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

விஷயத்திலும் முயற்சி செய்யுங்கள். (மல்.ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 110; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது) சந்ததிகளுக்கு மார்க்கத்தைக் கற்றுத் தரவும் மார்க்கத்துடன் தொடர்புபடுத்தவும், அவர்களின் மார்க்கப் பயிற்சிக்கும் செய்யப்படுகின்ற முயற்சி உலகியல் முயற்சிகளை விட குறைவாக உள்ளது. உலகத்திற்கு அதிகமாக முயற்சி செய்யப்படுகிறது. இதனால் சிலருக்கு சோதனையும் வருகிறது.

பிறகு அன்னார் சந்ததிகளின் காரணம் பற்றி கூறுகிறார்கள்: சிலருக்கு சந்ததிகளுக்காக விருப்பம் ஏற்படுகிறது. சில சொத்துள்ளவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். எங்களுக்கு சந்ததிகள் வேண்டும். எங்கள் சொத்துக்களுக்கு வாரிசு வேண்டும். அவர்கள் சந்ததிகளை விரும்புவது சொத்துக்களுக்காக என்பது போன்று பேசுகின்றனர். அதன் மூலம் சொத்துக்கள் அந்நியரிடம் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சந்ததிகளை விரும்புகின்றனர். அன்னார் கூறுகிறார்கள்: இவர்கள் இறந்து விட்டால் பங்குதாரர் யார்? பிள்ளைகள் யார்? என்று இம்மக்கள் அறியப்போவதில்லை. அப்போது எல்லாருமே அந்நியராகி விடுவர்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: பிள்ளைகளுக்காக விரும்பினால் அவர்கள் மார்க்கத்தின் தொண்டர்களாக வேண்டும் என்பதற்காக விரும்ப வேண்டும். (மல்.ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 109; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது) பிறகு அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த துஆவையும் கற்றுத் தந்துள்ளான்.

وَاَصْلِحْ لِيْ فِيْ ذُرِّيَّتِيْ ۚ اِنِّيْ تُبْتُ اِلَيْكَ وَاِنِّيْ مِنَ الْمُسْلِمِيْنَ

எனக்காக எனது சந்ததிகளை சீர்திருத்து–வாயாக. நிச்சயமாக நான் உன் பக்கமே திரும்புகிறேன். சந்தேகமின்றி நான் கட்டுப்பட்ட–வர்களைச் சார்ந்தவனாக இருக்கிறேன். **(46:16)** இங்கு சந்ததிகளை சீர்திருந்துவதற்காக துஆ தரப்பட்டுள்ளது. அத்துடன் இன்னொன்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது. நான் உன் பக்கமே திரும்புவனும் கட்டுப்படுபவனும் ஆக இருக்கிறேன். ஆகவே சந்ததிகளுக்காக துஆ செய்யும்போது அல்லாஹ்வுடைய கட்டளைகளின் படி அமல் செய்வதும் மற்றும் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்படுவதும் அவசியமாகும். அப்போதுதான் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

ஆகவே தாயும் தந்தைக்கும் மிகப்பெரும் பொறுப்பு உள்ளது. குழந்தைகளின் சீர்திருத்தத்–திற்காகவும், அவர்களின் தர்பிய்யத்திற்காகவும் நிரந்தரமாக அல்லாஹ்விடம் சந்ததிகளின் மேம்பாட்டிற்காகவும் துஆ கேட்டுக் கொண்டிருங்கள். உங்கள் முன்மாதிரியை சந்ததிகளுக்காக நிலைநாட்டுங்கள். உங்கள் முன் மாதிரி அல்லாஹ் தந்த அந்த போதனைக்கு எதிராக இருந்தால், உங்கள் செயல், தாய் தந்தையர் பிள்ளைகளுக்கு தருகிற அறிவுரைக்கு எதிராக இருந்தால் பிறகு சீர்திருத்தத்திற்கான துஆவில் நல்ல நிய்யத் இருக்காது. இவ்வாறான அமல்கள் இருக்கும்போது, நாங்கள் எங்களது சந்ததிகளுக்காக நிறையவே துஆ செய்திருந்தோம். இருந்தும் கூட அவர்கள் தடம் புரண்டு போய் விட்டனர் அல்லது எங்களை சோதனையில் இட்டு விட்டனர் என்று முறையிடுவதும் தவறாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் பெரும் திரண்ட துஆ ஒன்றை கூறுகிறான். எவர்கள் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்க நினைக்கிறார்களோ, தப்பிக்கிறார்களோ, ரஹ்மானாகிய இறைவனின் அடியார்களாக விரும்புகிறார்களோ அவர்களிடம் சில சிறப்புப் பண்புகள் இருக்கும். அதில் ஒன்று அவர்கள் இவ்வாறு துஆ செய்கின்றனர்.

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

எங்கள் இறைவா! எங்கள் வாழ்க்கை துணைவர்களையும் சந்ததிகளையும் கண்களுக்கு குளிர்ச்சியாக்கி வைப்பாயாக. எங்களை இறை–யச்சமுடையோரின் இமாமாக ஆக்குவாயாக. **(25:75)** இந்த துஆ சந்ததிகளுக்காகவும் வாழ்க்கை துணைவர்களுக்காகவும் ஆண்களும் செய்ய வேண்டும். பெண்களும் செய்ய வேண்டும். ஆண்களும் பெண்களும் நல்ல சாலிஹான சந்ததிகளுக்காக விரும்புகின்றனர்; துஆ செய்கின்றனர் என்றால் பிறகு குழந்தைகள் பிறந்த பிறகும் இவர்களின் வேலை முடியாது. மாறாக தாயும் தந்தையும் மனைவியும் கணவரும் தத்தமது வட்டத்தில் கண்காணிப்பவர்களும் இமாம்களும் ஆவர். இந்த உரிமை எப்போது நிறைவேறும் எனில் தாமும் சுயமே அவர்கள் தக்வாவின்படி நடப்பவர்–களாக இருக்க வேண்டும். பிள்ளைகளுக்காக துஆ செய்பவர்களாக இருக்க வேண்டும். தமது செயல்களையும் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்தினை ஆதாரமாகக் கொண்டு மிகவும் விரிவாக விளக்கியுள்ளார்கள்.

அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: திருமணம் செய்வதில் ஒரு நோக்கம் உண்டு. அது திருக்குர்ஆன் சூரா ஃபுர்கானில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அது என்னவென்றால்,

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

அதாவது, நம்பிக்கை கொண்டவர்கள் இவ்வாறு துஆ செய்கின்றனர். எமது இறைவனே! எமது மனைவியர் குறித்தும் பிள்ளைகள் குறித்தும் எமது உள்ளத்திற்கு குளிர்ச்சி வழங்குவாயாக. எமது மனைவி மற்றும் மக்களை நற்பேறுள்ளவர்–களாக்கி என்னை அவர்களுக்கு முன் வழிகாட்டியாக நிற்பவனாக ஆக்குவாயாக. **(25:75)**

(ஆரிய தரம். ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 23)

ஆக, இங்கு மீண்டும் மீண்டும் இந்த துஆவோடு சேர்த்து தமது செயலையும் காட்டுமாறு அல்லாஹ் கற்றுத் தந்துள்ளான். அதாவது நாங்கள் அவர்களின் முன் நிற்க வேண்டும். திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் ஒவ்வொரு துஆவுடனும் இதனை அறிவுறுத்தக் காரணம் நமக்கு சாலிஹான சந்ததிகளின் விருப்பம் இருந்தால் நாம் நமது செயலின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

பிறகு சந்ததிகளுக்கான விருப்பம் ஏன் ஏற்படுகிறது? ஏன் ஏற்பட வேண்டும்? மனிதப் படைப்பின் நோக்கத்தையும் குழந்தைக்காக ஆசைப்படும் முன் கண்முன் நிறுத்த வேண்டும் அல்லது குழந்தை பிறக்கும்போது இதனை கண்முன் நிறுத்த வேண்டும். நமது செயல்களைக் கண்காணிக்க வேண்டும். நம்மை சீர்திருத்து–வதற்கு கவலை கொள்ள வேண்டும். அதன் மூலமே சந்ததிகளும் நல்ல சாலிஹானவர்களாக இருப்பர். அது அல்லாமல் சொத்துக்களுக்கும் பொருள்களுக்கும் வாரிசாக இருப்பதற்காக மட்டுமே குழந்தைகளுக்கு ஆசைப்படக் கூடாது.

இந்த துஆவை எந்த வரிசையில் எவ்வாறு செய்ய வேண்டும்? இவை அனைத்தையும் விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: சந்ததிகள் வேண்டும் என்று அவனுக்கு ஏன் விருப்பம் வருகிறது? என்று மனிதன் சிந்திக்க வேண்டும். இதனை வெறும் இயற்கையான ஆசை என்ற மட்டத்தில் மட்டும் நிறுத்தி விடக் கூடாது. எவ்வாறு தாகம் எடுக்கிறதோ பசி எடுக்கிறதோ அதைபோன்று. ஆனால் மிகவும் சிறப்பான கண்ணோட்டத்துடன் பார்ப்பதாக இருந்தால் இதற்காகவும் கண்டிப்பாக கவலைப்பட வேண்டும். மனிதனை இறைவன், தன்னை இபாதத் செய்ய படைத்துள்ளான். அவன் கூறுவதுபோன்று மா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்ல லியஃபுதூன் – மனிதன் அவனே முஃமினாக இல்லாதபோது தனது வாழ்வில் அசல் நோக்கத்தை நிறைவேற்றவில்லையெனில் இபாதத்தின் உரிமையை வழங்கவில்லை எனில் மாறாக தீமைகளில் கட்டுப்படாமையில் வாழ்வைக் கழிக்கிறார்கள் எனில் பாவத்துக்கு மேல் பாவம் செய்கிறார் எனில் அத்தகைய மனிதரின் குழந்தை ஆசை என்ன விளைவை ஏற்படுத்தும்? அதாவது பாவம் செய்வதற்கு ஒரு பிரதிநிதியை நிர்ணயிக்க விரும்புகிறார்? தான் எதனை குறைவு வைத்தார்? பிறகு குழந்தையை விரும்புகிறார்? எனவே சந்ததிகள் விரும்புவது நற்செயல் செய்து முற்றிலும் இறைவனுக்குக் கட்டுப்பட்டு மார்க்கத்திற்கு சேவை செய்பவரை உருவாக்க வேண்டும் என்பதை விடுத்து பிற ஆசைகள் முற்றிலும் பாவமும் ஒரு வகையில் வீணான செயலும் ஆகும். பிறகு அவர்களை பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் என்று பெயர் வைப்பதற்கு பதில் பாக்கியாத்துஸ் ஸய்யிஆத் என்று பெயர் வைப்பது அனுமதிக்கப்பட்டதாக இருக்கும். பின்னால் இருப்பவர் நல்ல சாலிஹான சந்ததியாக இல்லையெனில் அவர் தமக்குப் பின்னால் தீமைகளைச் செய்பவரை விட்டுச் செல்வார்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதர் மார்க்க சேவை செய்யக் கூடிய நல்ல சாலிஹான சந்ததிகளை விரும்புகிறேன் என்று கூறினால் பிறகு அவர் தனது நிலையில் ஒரு சீர்த்திருத்தத்தை ஏற்படுத்தவில்லை எனில் அது வெறும் வாதமாகவே இருக்கும். விருப்பமோ நல்ல சந்ததிகளைப் பெற வேண்டும்; ஆனால் அவரது செயலோ அதற்கு மாற்றமாக இருக்கிறது.

அதிகமானவர்கள், நல்ல சந்திகள் – ஸாலிஹான சந்ததிகள் கிடைக்க துஆ செய்யுங்கள் என்று கூறுகின்றனர். ஆனால், அவர்களின் தொழுகைகளைப் பற்றி கேட்கப்பட்டால் எல்லா தொழுகைகளையும் தொழுவதற்கு முயற்சி செய்கிறோம் என்கின்றனர். ஃபர்ளான தொழுகை–களையே தொழுவதில்லை எனில் இவர்களின் நன்மையின் நிலை எப்படியிருக்க முடியும்?

அன்னார் கூறுகிறார்கள்: அவர்கள்தான் பாவமும் கட்டுப்பாடமையுமான வாழ்வை வாழ்கிறார்கள். ஆனால் வாயால் கூறுகிறார்கள். நான் நல்ல சாலிஹான சந்ததி கிடைக்க விரும்புகிறேன். இந்நிலையில் அவர் தனது வாக்குறுதியில் பொய்யராவார். நல்ல மற்றும் இறையச்சமுள்ள சந்ததிகளை விரும்புவதற்கு முன் அவர் தன்னை சீர்த்திருத்துவது அவசியமாகும். தமது வாழ்வை தக்வா உள்ளவரின் வாழ்வாக ஆக்க வேண்டும் அப்போது அவரது ஆசை விளைவை உருவாக்கும் ஓர் ஆசையாக இருக்கும். அத்தகைய சந்ததிகள் உண்மையில் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் என்ற சொல்லை உண்மைப்படுத்துபவராக இருப்பதற்கு தகுதியானவராக இருப்பர். ஆனால் அவர்களுடைய விருப்பத்திற்கு காரணம் தமது பெயர் எஞ்சியிருக்க வேண்டும். நமது சொத்துக்களுக்கும் பொருளுக்கும் வாரிசு வேண்டும் அல்லது பெரிய பிரபலமான மனிதராக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது எனது கருத்தில் அது இணை வைத்தலாகும்.

அவர்கள் இன்னொரு விஷயத்தை கூறுகிறார்கள். மக்கள் சந்ததிகளுக்காக மிகவும் விரும்புகின்றனர். சந்ததிகள் கிடைக்கவும் செய்கின்றன. பிறகு சந்ததிகளை தர்பிய்யத் மற்றும் அவர்களை நல்லவராக ஆக்குவதற்கும் இறைவனின் கட்டுப்பட்ட அடியார் ஆக்குவதற்கும் சரியான கவலை கொள்பவராக ஒருவரையும் பார்க்க முடியவில்லை. இவர்கள் ஒருபோதும் சந்ததிகளுக்காக துஆ செய்வதில்லை. தர்பிய்யத்தின் படித்தரங்களை கவனத்தில் கொள்வதும் இல்லை. துஆவின் பக்கம் மிகவும் குறைவான கவனமே உள்ளது. தர்பிய்யத்தின் பக்கம் இருக்க வேண்டிய கவனமும் இல்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: எனது நிலை என்னவெனில் எனது நண்பர்கள், சந்ததிகள் மற்றும் மனைவிக்காக துஆ செய்யாமல் எனது எந்த தொழுகையையும் நான் தொழவில்லை. நிறைய பெற்றோர் எத்தகையவர்களாக இருக்கின்றனர் எனில் தமது சந்ததிகளுக்கு தீய வழக்கங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அவர்கள் தீமை செய்ய கற்றுக் கொள்கிறார்கள். அவர்களை எச்சரிப்பதில்லை. விளைவு என்னவெனில் நாளுக்கு நாள் அவர்கள் துணிவு கொண்டு விலகிச் செல்ல ஆரம்பிக்கின்றனர். தடுக்காவிட்டால், புரிய வைக்காவிட்டால் அந்த தீமைகள் சிறிது சிறிதாக அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மக்கள் சந்ததிகளை விரும்புகிறார்கள். அவர்கள் மார்க்கத்தின் தொண்டர்கள் ஆவதற்காக அல்ல. மாறாக உலகில் அவர்களுக்கு ஒரு வாரிசு வேண்டும் என்பதற்காக ஆகும். பிறகு குழந்தை பிறந்து விட்டால் அவர்களின் தர்பிய்யத்திற்காகக் கவலைப்படுவதும் இல்லை அல்லது அவர்களின் கொள்கைகளை சீர்திருத்த முயற்சி செய்யப்படுவதும் இல்லை. மார்க்கத்தை கற்பிப்பதும் அவசியமாகும். நேரம் கிடைக்கவில்லை. உலகக் கல்வியில் மூழ்கியிருக்கிறோம். உலகியல் பணிகளில் நாங்கள் மூழ்கியிருந்ததால் நாங்கள் கவனமூட்டவும் இல்லை அல்லது மார்க்கத்தை கற்றுத் தர ஏற்பாடு செய்யவும் இல்லை என்பதல்ல. மார்க்கத்தைக் கற்றுத் தருவது கொள்கைகளை கற்றுத் தருவது மிகவும் அவசியமாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: நல்லொழுக்க நிலையை சரிபடுத்தப்படுவதும் இல்லை. இங்கு நல்லொழுக்கத்தின் தரம் வேறாகும். திருக்குர்ஆனில் கற்றுத் தரப்பட்ட நல்லொழுக்கத்தின் தரம் மிக உயர்வானதாகும். அது வெறும் உலகியல் நல்லொழுக்கத்தின் தரம் அல்ல. அல்லாஹ் நமக்கு கற்றுத் தந்த நல்லொழுக்கத்தின் தரத்தை நாம் தேட வேண்டும். இஸ்லாம் கற்றுத் தருவதையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) தமது செயல் மூலம் நிரூபித்துக் காட்டியதையும் தேட வேண்டும். அந்த நல்லொழுக்கத்தைத்தான் நமது சந்ததிகளிடமும் நிலைநாட்ட வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: நினைவில் கொள்ளுங்கள். நெருங்கிய தொடர்புகளைப் புரியாதவரின் ஈமான் சரியாக இருக்க முடியாது. இதில் குறைபாடு உடையவரிடம் மேற்கொண்டு நன்மைகளைக் குறித்து நாம் என்ன எதிர்பார்ப்பு வைக்க முடியும்?

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் சந்ததிகளின் விருப்பத்தை எவ்வாறு திருக்குர்ஆனில் கூறியுள்ளான் எனில் ரப்பனா ஹப்லனா மின் அஸ்வாஜினா வதுர்ரியாத்தினா குர்ரத்த அய்யுனிவ் வஜ்அல்னா லில்முத்தகீன இமாமா. அதாவது எங்கள் இறைவா! எமது மனைவி மக்களை எமது கண்களுக்கு குளிர்ச்சியாக்கி வைப்பாயாக. அவர்கள் கட்டுப்பாடமை மற்றும் தீமையின் வாழ்வு வாழாத நிலையில்தான் இது கை கூடும். மாறாக இபாதுர் ரஹ்மானின் (ரஹ்மானின் அடியார்களின்) வாழ்வு வாழ்பவராக இருப்பர். இறைவனுக்கு ஒவ்வொரு பொருளின் மீதும் முன்னுரிமை தருபவராக இருப்பர். அடுத்து கூறும்போது தெளிவாகவே கூறி விட்டான். வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா – சந்ததிகள் இறையச்சமுள்ளவராக இருந்தால் மட்டுமே இவர் அவர்களின் இமாமாக இருக்க முடியும். இதில் இறையச்சமுள்ளவராக ஆவதற்கான துஆவும் உள்ளது. (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 370 -373; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) அதாவது நம்மையும் அல்லாஹ் தக்வாவின்படி நடப்பவராக்க வேண்டும். பிறகு சந்ததிகளும் இறையச்சமுள்ளவராக இருக்க வேண்டும்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: சந்ததிகளைப் பரிபாலிப்பது கருணையின் அடிப்படையில் அல்ல அல்லது பிரதிநிதி ஆக்குவதற்காக அல்ல. மாறாக வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா என்ற அடிப்படையில் இருக்க வேண்டும். சந்ததிகள் மார்க்கத்தின் பணியாளராக இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: எத்தனை பேர் சந்ததிகளுக்காக துஆ செய்கின்றனர். சந்ததிகள் மார்க்கத்தின் வீரராக இருக்க வேண்டும் என்று மிகவும் குறைவானவர்களே அவ்வாறு செய்கின்றனர். எதற்காக சந்ததிகளுக்கு முயற்சி செய்கிறோம் என்றே பெரும்பாலார் முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றனர். பெரும்பாலார் தமது பிரதிநிதிகளாக இருப்பதற்காக சந்ததிகளை விரும்புகின்றனர். வேறு நோக்கமே இருப்பதில்லை. அன்னியர் அல்லது வேறு பங்காளி தமது சொத்துக்கு வாரிசாகி விடக் கூடாது என்பதே பெரும் முயற்சியாக உள்ளது. ஆனால் நினைவில் கொள்ளுங்கள். இவ்வாறு மார்க்கம் முற்றிலும் அழிக்கப்படுகிறது. சுருக்கமாக சந்ததிகளுக்காக விரும்பும்போது அவர்கள் மார்க்கத்தின் தொண்டர்களாக விளங்க வேண்டும் என்பதற்காக ஆசைப்பட வேண்டும். குறிப்பாக வக்ஃபே நவ்வின் பெற்றோர் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். தமது பிள்ளை –களுக்கு மார்க்கத்தின் பக்கம் கவன மூட்ட வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 381-382; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு அவர்கள் கூறுகிறார்கள்: நான் பார்க்கிறேன். அவர்கள் எதனை செய்கிறார்களோ உலகிற்காகவே செய்கின்றனர். உலகப் பற்று இவர்களை இவ்வாறு செய்ய வைக்கிறது. இறைவனுக்காக செய்வதில்லை. குழந்தைகளை விரும்பினால் இந்த எண்ணத்தில் விரும்ப வேண்டும். அதாவது வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா என்ற நிய்யத்தில் ஆசைப்பட வேண்டும். எந்த குழந்தை பிறந்தாலும் அது இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்தும் குழந்தையாக இருக்க வேண்டும். அத்தகைய கடும் விருப்பம் இருந்தால் ஸக்கரிய்யாவுக்கு தந்தது போன்ற சந்ததிகளைத்


**திருக்குர்ஆனிலிருந்து...**

*இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர் –களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

தர இறைவன் சக்தி படைத்தவனாவான். ஆனால் நான் பார்க்கிறேன். எமது தோட்டம் அல்லது எமது எஸ்டேட் இதனை ஏதாவது பங்காளி எடுத்துக் கொண்டு போய் விடக்கூடாது என்பதற்கு மேல் அவர்கள் சிந்தனை செல்வதில்லை. ஆனால் இவர்கள் இவ்வளவு கூட சிந்திப்பதில்லை. பேறிழந்தவரே! நீர் இறந்து விட்ட பிறகு உம்மை பொருத்தவரை உமது பகைவர், நண்பர் எல்லாம் ஒன்றுதான்.

அவர்கள் கூறுகிறார்கள்: பெரும்பாலார் கூறக் கேட்டுள்ளேன். எங்களுக்கு குழந்தை வேண்டும். துஆ செய்யுங்கள். எமது சொத்துக்கு குழந்தை வேண்டும். துஆ செய்யுங்கள். எமது பங்காளி எவரும் எமது சொத்துக்களை எடுத்துக் கொண்டு போய் விடக்கூடாது. சந்ததிகள் வேண்டும். அது தீயதாகவே இருந்தாலும் சரி. இவ்வளவு அறிவுதான் இஸ்லாம் பற்றி இருக்கிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 351 -352; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) முஸ்லிம்களிடம் இது சகஜமாகக் காணப்படுகிறது. குறிப்பாக ஆண் குழந்தை பிறப்பதற்காக அதிக விருப்பம் காணப்படுகிறது. ஆண் மக்கள் பிறந்து விட்டால் பெற்றோர் தமது சொத்துக்களுக்கு ஆண் மக்களையே முழுமையான வாரிசாக்கி விடுகின்றனர். பெண் மக்களுக்கு எதுவும் தருவதில்லை. இது இஸ்லாமிய போதனைக்கு எதிரானதாகும். பிறகு அந்த ஆண் மக்களும் அந்த சொத்துககளை வீணாக்கி விடுகின்றனர். இதனை நாம் உலகில் பார்க்கிறோம். உதாரணம் காணக் கிடைக்கிறது. நான் முன்னரே கூறியதுபோன்று குறிப்பாக வாகிஃபீன நவ் உடைய பெற்றோர் தமது குழந்தைகளின் தர்பிய்யத்தில் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அந்த நோக்கத்திற்காக துஆவும் செய்ய வேண்டும். அவர்கள் பெரியவர்களாகி உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர்களாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும். வக்ஃபே நவ் என்ற டைட்டில் போதாது. பெரியவனானதும் நாங்கள் எங்கள் வேலையைப் பார்க்கிறோம் என்பதன்று. மாறாக வாகிஃபீனே நவ் ஜமாஅத்திற்கு அவர்களின் தேவை இருக்கிறதா? இல்லையா? என்று முதலில் ஜமாஅத்திடம் கேட்க வேண்டும். அவர்கள் தமது சொந்த வேலையை செய்து கொள்வதற்கு ஜமாஅத் அனுமதி அளித்தால் செய்யுங்கள். அது அல்லாமல் அவர்கள் களங்கமற்ற முறையில் தமது உடன்படிக்கையையும் பெற்றோரின் உடன்படிக்கையையும் நிறைவேற்றியவாறு தம்மை வக்ஃபிற்காக அர்ப்பணித்து விட வேண்டும்.

ஆகவே, குழந்தைகளுக்காக துஆவை இந்த சிந்தனையுடன் செய்ய வேண்டும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தரும் குழந்தைகள் வேண்டும். அவர்கள் பெற்றோரின் மற்றும் குடும்பத்தின் கண்ணியத்தை நிலைநாட்டுபவராக இருக்க வேண்டும். தமது பாட்டனார்களின் பாட்டனாரின் கண்ணியத்தையும் நிலை நாட்ட வேண்டும். பெரும்பாலான குடும்பங்களில் பாட்டனார்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபிகளாக உள்ளனர். அவர்களின் சந்ததிகளாக இருப்பது மட்டும் போதுமானதல்ல. அதனை பெருமையுடன் கூறுகிறார்கள். நல்லது; ஆனால் அந்த நன்மைகளும் தொடர்ந்தால்தான் பெருமை. சந்ததியாக இருப்பது மட்டும் போதுமானதல்ல. மாறாக பெற்றோரின் பணி இதுவும் ஆகும். சந்ததிகளுக்காக இவ்வாறும் துஆ செய்ய வேண்டும். அவர்கள் பெற்றோரின் நன்மைகளை நிலைநிறுத்துபவராக இருக்க வேண்டும். இந்த துஆவை பெற்றோர் செய்யும்போது அவர்கள் தம் மீதும் பார்வையை வைப்பர். ஏனெனில் நாம் நமது முன்னோர்களின் பெயரை உயிருடன் வைப்பதற்கு நாம் நமது செயல்களை உற்று நோக்குபவராகவும் இருக்க வேண்டும். ஆகவே தமது சொத்துக்களுடன் சேர்த்து ஒவ்வொருவரும் கடைசி நேரம் வரை அவர்களது சந்ததிகள் நல்லியல்புடன் இருப்பதற்கும் துஆ செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவனது உதவி எப்போதும் நன்மையில் முன்னேறிக் கொண்டிருப்பவருக்கே கிடைக்கிறது. ஓரிடத்தில் அவர்கள் தேங்கி விட மாட்டார்கள். அவர்களுக்கே நல்ல முடிவு கிடைக்கிறது. நல்ல முடிவுக்காக அன்னார் கூறினார்கள். தமக்காகவும், தமது மனைவி மக்களுக்காகவும் தொடர்ந்து துஆ செய்ய வேண்டும்.

பிறகு அன்னார் நமக்கு போதனை செய்தவாறு கூறுகிறார்கள்: சந்ததிகளுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் பாடமாகவும் விளங்கக் கூடிய பணிகளைச் செய்யுங்கள். இது பெற்றோரின் பணியாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: இதற்காக அவசியமானது எல்லாவற்றிற்கும் முதலில் தம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் உயர் தரமான இறையச்சமுள்ளவராகவும் தூயவராகவும் ஆகி விடுவீர் எனில் இறைவனை திருப்தி செய்வீர்கள் எனில் பிறகு இறைவனும் உமது சந்ததிகளுடன் நல்ல முறையில் நடப்பான் என்பது உறுதியாகி விட்டது.

அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனில் ஹிழ்ர் மற்றும் ஹஸ்ரத் முஸா (அலை) அவர்களுடைய சம்பவம் எழுதப்பட்டுள்ளது. இருவரும் சேர்ந்து ஒரு சுவரைக் கட்டுகின்றனர். அது அனாதை சிறுவர்களுக்கு உரியதாக இருந்தது. அல்லாஹ் கூறுகிறான்: وَكَانَ اَبُوۡهُمَا صَالِحًا அவர்களின் தந்தை நல்லவராக இருந்தார். **(18:83)** அந்த பிள்ளைகள் எப்படி இருந்தார்கள் என்று கூறவில்லை. மாறாக அந்த பிள்ளைகளின் பெற்றோரைக் குறிப்பிடுகிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: இந்த நோக்கத்தைப் பெறுங்கள். சந்ததிகளுக்காக எப்போதும் அவர்கள் நல்லவராக இருப்பதற்கு விரும்புங்கள். நீங்களும் நல்லவராக இருங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 110; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) பிறகு அல்லாஹ் சந்ததிகளின் மேம்பாட்டிற்காகவும் ஏற்பாடு செய்வான். வாழ்வாதாரத்திற்கும் ஏற்பாடு செய்வான். ஆக இதுவே அடிப்படை நியதியாகும். இதன் பக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள். இது திருக்குர்ஆனின் போதனையின் விளக்கமேயாகும். பெற்றோரின் முன்மாதிரியே குழந்தைகளின் தர்பிய்யத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. நம்மில் ஒவ்வொருவரும் சந்ததிகளுக்கு மிகச்சிறந்த முன்மாதிரியாவோமாக. உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவராக செய்த வாக்குறுதியை நிறைவேற்றுவோமாக. மற்றவரின் பக்கம் பார்வை செலுத்துவதை விடுத்து ஒருவரின் வழக்கம் மற்றவரையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர் எப்படி என்று அவ்வாறு செய்யாமல் தம்மை சீர்திருத்துபவராக இருப்போமாக. அப்போதுதான் நாம் நல்ல சந்ததிகளைக் கொண்டு செல்பவர்களாகவும் இருக்க முடியும். மேலும் நாம் தக்வாவின் படி செல்பவர்களாகவும் இருக்க முடியும். நாம் நமது சந்ததிகளுக்காக நிரந்தரமாக துஆ செய்து வருபவராக இருப்போமாக. அல்லாஹ் நமது சந்ததிகளையும் எப்போதும் நமது கண்களுக்கு குளிர்ச்சியாக்கி வைப்பானாக. மேலும் அவர்களின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்திக் கொண்டே இருப்பவர்களாக நம்மை ஆக்குவானாக.

★ ★ ★ ★ ★


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**ஜலாலுத்தீன்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

**METAPLAST**

DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.

Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....*

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

# கனடா பாராளுமன்றத்தில் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்புமிக்க எழுச்சிமிக்க உரை

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

சுற்றுச்சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி மட்டும் நாம் கூறுவதாக இருந்தால் Global Warning -ற்கான (உலகம் முழுவதும் வெப்பம் அதிகரித்து இருப்பது) ஒரு மிகப்பெரும் காரணம் மேற்கத்திய உலகில் ஏற்பட்டுள்ள தொழில் புரட்சி மற்றும் அதிகமாக காடுகள் அழிக்கப்படுவதும் ஆகும். இப்போது இவை முன்னேற்றத்தில் தடைகளை ஏற்படுத்தும்.

எனவே, வளர்ந்து வரும் சக்திகள் இத்தகைய கட்டுப்பாடுகளை நீதிக்கு எதிரானதாகவும், நயவஞ்சகத் தன்மையைக் கொண்டதாகவும் கருதுகின்றன. மேலும், இவை பெரும் சக்திகள் தரப்பிலிருந்து அவற்றின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், வல்லரசுகளின் தரப்பிலிருந்து World Order -ல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒரு நடவடிக்கையாக இதனை வளர்ந்து வரும் நாடுகள் கருதுகின்றன. எனவே, சுற்றுச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பான பிரச்சனை சுற்றுச் சூழலின் எல்லைக்குட்பட்ட பிரச்சனையாக மட்டும் இருப்பதில்லை. மாறாக இது உலகில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை -யில் ஒரு முக்கிய பங்கு வசிக்கின்றது. இது சமுதாயங்களுக்கிடையில் சகிப்புத்தன்மை இல்லாத நிலையை உருவாக்குகின்றது.

இவ்வாறே உலகளாவிய பொருளாதாரப் பிரச்சனைகளின் பின்னணியில் பல்வேறு அரசாங்கங்களின் நீதிக்கு எதிரான பாலிஸிகள் மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலைமை ஆகியவை இப்போது எந்நிலையை அடைந்திருககின்றனவென்றால் இவை உலகளாவிய அமைதிக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளும் நிர்பந்தத்திற்கு நிபுணர்கள் ஆளாகியிருக்கின்றனர்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

சுற்றுச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தவிர மேலும் பல செயல்கள் உலகின் அமைதியின் மீது பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. அவற்றின் இறுதி இலக்கு சுயநலம் மற்றும் நீதிக்கு எதிரான பாலிஸிகளை வகுப்பது வரை சென்றடை-கின்றது. இதனை பல்வேறு நாடுகள் செயல்படுத்தி வருகின்றன. எந்நிலையிலும் இந்த அபாயங்களைக் கண்முன் நிறுத்தியவாறு உலகம் ஒரு பேரழிவின் பக்கம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. இந்த உறுதியற்ற தன்மையின் காரணமாக அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் ஆகிய இருவரது கவலை மற்றும் அச்சம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எனவே, மிகவும் துன்பத்தைத் தரக்கூடிய பல்வேறு பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியது வருகின்றது. எந்த பிரச்சனையை எல்லாவற்றிற்கும் முதலாவதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது உலகிற்கு புரியாமல் இருக்கின்றது. Global Warning மற்றும் சுற்றுச்சூழலில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை பார்க்க வேண்டுமா? அல்லது சமூக பிரச்சனைகள் பற்றி பேச வேண்டுமா? எல்லாவற்றிற்கும் மேல் தீவிரவாதத்திற்கு எதிராக போர் புரிவதை முதலில் செய்ய வேண்டுமா? அல்லது இப்போது சிரியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பார்க்க வேண்டுமா? அல்லது ரஷ்யாவும் அமெரிக்கா-வும் யமனிலும் நடந்த சண்டைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமா? என்று உலகம் புரியாமல் இருக்கின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

எனது பார்வையில் நமக்கு முன்னால் இப்போது இருந்து வருகின்ற மிகவும் இக்கட்டான அவசியமான பிரச்சனை உலகில் அமைதி இல்லாமல் இருப்பதாகும். முஸ்லிம் நாடுகள் இந்த குழப்பம் மற்றும் அமைதியற்ற உறுதியற்ற நிலையின் தலைமையகமாக இருந்து வருவது மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். ஆனால், அவர்களது மார்க்கம் அவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்குரிய மிகவும் உயர்வான போதனைகளை வழங்கியுள்ளது.

உதாரணமாக சூரா அல்முஃமினூனின் 9 -வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: உண்மையான நம்பிக்கையாளர்கள் தங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்-களையும் உடன்படிக்கைகளையும் பேணி பாதுகாப்பார்கள் (23:9) என்று கூறுகின்றான். அரசாங்கத்தின் சாவிகள் ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்படும் மிகப்பெரும் அமானிதமாகும். நாட்டின் ஆட்சியாளர்கள் நன்றியுணர்வுடனும் முழுமையான நீதியுடனும் தமது சமுதாயத்திற்குத் தொண்டு செய்வதாக உடன்படிக்கை எடுத்துக் கொள்கின்றன. ஆனால் பெரும்பாலான விவகாரங்களில் பெரும் பெரும் வாக்குறுதிகள் முற்றிலும் நிறைவேற்றப்படாமல் இருப்பதையும் அவை செயல்படுத்தப்படாமல் இருப்பதையும் வருத்தத்துடன் நாம் கூற வேண்டியது இருக்கின்றது. எனவே, திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதாக இருந்தால் அரசாங்கங்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையில் எந்த ஒரு கருத்து வேறுபாடும் சண்டைகளும் தென்படாது.

மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் சூரா அல்மாயிதாவின் 10 -வது வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்:

ஒரு சமுதாயம் அல்லது ஒரு தனி நபருக்கு இன்னொரு சமுதாயம் அல்லது தனி நபருடன் பகைமை ஏற்பட்டு விட்டால் அந்த சமயத்தில் கூட நிலைமைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் இதையே விரும்புகின்றான். ஆனால், இன்றைய நாட்களில் சமுதாயத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவதற்குப் பகரமாக சமூகத்தில் அநீதியும் பிறரது உரிமைகளைப் பறிக்கின்ற நிலையும் இருந்து வருவதை நாம் பார்க்கின்றோம். சமத்துவமில்லாத இத்தகைய நிலையானது நேரடியாக உலகின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

பிறகு திருக்குர்ஆனில் சூரா அல்ஹுஜராத்தின் 10 -வது வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

அதாவது ஒரு சமுதாயம் அல்லது பல சமுதாயங்களுக்கிடையில் சண்டை ஏற்பட்டால் அவர்களுக்கு பக்கத்தில் உள்ளவர்களும் அவற்றின் நட்பிலுள்ள சமுதாயங்களும் அவற்றிற்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். பேச்சு வார்த்தையின் மூலமாக அமைதி நிலைநாட்டப்படாமல் இருந்தால் எல்லா சமுதாயங்களும் ஒன்று சேர்ந்து அநீதி இழைக்கின்ற சமுதாயத்திற்கு எதிராக நின்று அந்த அநீதியைத் தடுத்து நிறுத்த வேண்டும். அநீதி இழைக்கின்ற சமுதாயம் நீதியில் நிலைபெற்று விட்டால அதன் மீது தேவை இல்லாத கட்டுப்பாடுகளை விதிக்க கூடாது. அந்த சமுதாயத்தை இழிவுபடுத்தவும் கூடாது. மாறாக அந்த சமுதாயத்தின் இந்த நன்மையின் காரணமாக அத்தகைய சமுதாயத்திற்கு முன்னேறிச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். அதன் மூலம் ஒரு நீண்ட காலம் வரை அங்கு அமைதியை நிலைநாட்ட முடியும்.

*(தொடரும்...)*

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 10-17 August 2017 Issue No. 32-33

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# இலண்டனில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் 51 –வது U.K. ஆண்டு மாநாடு இலண்டனில் ‘ஹதீகத்துல் மஹ்தி’ என்ற இடத்தில் ஜுலை 28, 29 மற்றும் 30 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. 90 நாடுகளில் இருந்து முப்பதாயிரத்திற்கும் அதிகமான அஹ்மதி முஸ்லிம்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஜமாஅத்தின் கொடியினை ஏற்றி வைத்து துஆ செய்து மாநாட்டின் நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார்கள். மாநாட்டின் மூன்று நாட்களிலும் கலீஃபா அவர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். மேலும் மார்க்க அறிஞர்கள் பல்வேறு மார்க்க ஆன்மீகத் தலைப்புகளுடன் ‘திருக்குர்ஆன் அடிப்படையில் உண்மையான ஜிஹாது’, ‘தற்காலத்தின் தீமைகளும் தூய வாழ்க்கையைப் பெறுதலும்’ உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளி உரையாற்றினர். பிரிட்டன் உட்பட பல்வேறு நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், தூதுவர்கள், அறிஞர்கள், மார்க்கப் பிரதிநிதிகள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு வாழ்த்துரைகள் வழங்கினர். மாநாட்டின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஜமாஅத்தின் சேனலான முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (M.T.A) முழு உலகிற்கும் நேரலையாக ஒளிபரப்பு செய்தது.

மாநாட்டின் இரண்டாம் நாளில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கடந்த ஓராண்டில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆற்றிய இறைப் பணிகள் மற்றும் மக்கள் தொண்டுகள் குறித்தும், ஜமாஅத்திற்கு கிடைத்த இறை அருள்கள், வெற்றிகள் குறித்தும் விரிவாகப் பேசினார்கள். கடந்த ஆண்டில் ஹோண்டுரஸ் என்ற மத்திய அமெரிக்க நாட்டில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டதையும், இதுவரை 210 நாடுகளில் ஜமாஅத் பரவியுள்ளது என்பதையும், கடந்த ஓராண்டில் முழு உலகிலும் ஆறு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளனர் என்பதையும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அறிவித்தார்கள். மாநாட்டின் மூன்றாம் நாளில் உலகளாகிய பைஅத் என்ற அரிய நிகழ்ச்சி நடைபெற்றது. பத்து நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டவாறு ஜமாஅத்தில் இணைகின்ற இந்த நிகழ்ச்சியில் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் நேரடியாகவும் முழு உலகிலுமுள்ள அஹ்மதி முஸ்லிம்கள் தொலைக்காட்சி வாயிலாகவும் கலந்து கொண்டு தத்தமது மொழிகளில் உடன்படிக்கை வாசகங்களைக் கூறி கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இறுதி அமர்வில் ஹுஸூர் அவர்களின் நிறைவுரை மற்றும் துஆவுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவை அடைந்தன. மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உள்ளூர் அஹ்மதி முஸ்லிம்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் தொலைக்காட்சி வாயிலாக கலந்து கொள்வதற்கான விரிவான ஏற்பாடுகளையும், தமிழ்கூறும் நல்லுலகு பயன் பெறும் வகையில் தமிழாக்கத்துடன் நேரலை இணையதள சேவைக்கான ஏற்பாட்டையும் சிறப்பாக செய்திருந்தது. இது பற்றிய செய்தி தினகரன் (நெல்லை பதிப்பு) நாளிதழில் 31.7.2017 பதிப்பில் “அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு மேலப்பாளையத்தில் நேரடி ஒளிபரப்பு” என்ற தலைப்பில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

(தகவல் தொகுப்பு : A. பஷீர் அஹ்மது, வெளியீட்டுச் செயலர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS

DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic)
Tirunelveli - 627 005.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

வழிமுறையானது குறையுள்ளதாகவும் நிறைவடையாமலும் சந்தேகத்திற்குரிய -தாகவும் இருக்கின்றது. எனவே, ஒவ்வொரு தத்துவவாதியும் அறிவின் மூலமாக மட்டும் இறைவனை அடையாளம் கண்டு கொள்ள முடியாது. மாறாக, பெரும்பாலும் அறிவின் மூலமாக மட்டும் இறைவனைப் பற்றி அறிய விரும்புகின்ற அத்தகைய மக்கள் இறுதியில் நாத்திகர்களாக ஆகி விடுகின்றனர். வானத்திலும் பூமியிலும் உள்ள படைப்புகளைப் பற்றி சிந்திப்பது எந்தப் பலனையும் அவர்களுக்குத் தர முடியாது. அவர்கள் இறைவனின் சிறப்புமிக்க அடியார்களை ஏளனம் செய்து எள்ளி நகையாடுகின்றனர். உலகில் அத்தகைய எண்ணற்ற பொருள்கள் உள்ளன. அவற்றின் இருப்பினால் எந்தவொரு பலனும் இருப்பதை நாம் பார்க்கவில்லை. நமது அறிவின் ஆராய்ச்சியின் மூலம் அவற்றில் படைத்தவனின் இருப்பிற்கு ஆதாரமாகத் திகழ்கின்ற எந்தவொரு படைப்பும் இருப்பது நிரூபிக்கப்பட -வில்லை. மாறாக, முழுக்க முழுக்க வீணாகவும் பொய்யான வடிவிலும்தான் அந்த பொருள்கள் இருக்கின்றன என்பது அவர்களின் ஆதாரமாகும். ஆனால், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் ஒன்றைப் பற்றிய அறிவு இல்லாததனால் அந்த பொருளே இருக்க முடியாது என்பது கட்டாயமானதல்ல என்பது இந்த அறிவீனர்களுக்குத் தெரியவில்லை. இதுபோன்ற எண்ணங்களை உடைய மக்கள் பல இலட்சக்கணக்கில் இக்காலத்தில் இருக்கின்றனர். அவர்கள் தம்மைப் பற்றி சுயமே முதல் தகுதியிலுள்ள அறிவாளியாகவும் தத்துவவாதியாகவும் கருதுகின்றனர். அவர்கள் இறைவனின் இருப்பைக் கடுமையாக மறுக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

இப்போது வெளிப்படையாகத் தெரிய வருவது என்னவென்றால், அவர்களுக்கு ஏதாவதொரு வலுவான அறிவுப்பூர்வமான சான்று கிடைத்திருந்தால் அவர்கள் இறைவனின் இருப்பை மறுத்திருக்க மாட்டார்கள். அல்லாஹ் ஜல்ல ஷானுஹுவின் இருப்பிற்கு ஆதாரமாகத் திகழ்கின்ற அறிவுப்பூர்வமான உறுதியான தெளிவு அவர்களைக் குற்றப்படுத்தியிருந்தால் அவர்கள் மிகவும் வெட்கம் இல்லாமலும் எள்ளி நகையாடி பரிகாசம் செய்தவாறு இறைவனின் இருப்பை மறுக்கக் கூடியவர்களாக ஆகியிருக்க மாட்டார்கள். எனவே, எந்தவொரு நபரும் தத்துவவாதிகளின் கப்பலில் அமர்ந்தவாறு சந்தேகத்தின் வெள்ளத்திலிருந்து இரட்சிப்பைப் பெற முடியாது. மாறாக, கண்டிப்பாக அவர் மூழ்கி விடுவார். கலப்பற்ற ஓரிறைமையின் பானம் ஒருபோதும் ஒருபோதும் அவருக்குக் கிடைக்காது. நபி (ஸல்) அவர்களை ஊடகமாகக் கொள்ளாமல் ஓரிறைமை கிடைக்க முடியும்; அதன் மூலமாக இரட்சிப்பை பெற முடியுடம் என்ற இந்த எண்ணம் எந்த அளவு பொய்யானதும் துர்நாற்றமிக்கதாகவும் இருக்கின்றது ?

அறிவற்றவர்களே ! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாத வரை அவனது ஓரிறைமையின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும் ? உறுதியான ஓரிறைமை நபியின் மூலமாக மட்டுமே கிடைக்க முடியும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். இவ்வாறே நமது நபி (ஸல்) அவர்களும் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் ஆயிரக்கணக்கான வானத்து அடையாளங்களைக் காட்டி அவர்களை இறைவனின் இருப்பை ஏற்றுக் கொள்ள வைத்தார்கள். இப்போது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான முறையிலும் முழுமையான முறையிலும் பின்பற்றுபவர்கள் இந்த அடையாளங்களை நாத்திகர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றனர். இதுவே உண்மையான விஷயமாகும். உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்தில் இருந்து வெளியேற மாட்டான். மேலும் உண்மையான ஓரிறைமை அவனது உள்ளத்தில் நுழைய முடியாது. உறுதியான முறையில் இறைவனின் இருப்பை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த தூய முழுமையான ஓரிறைமை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.

(ஹகீகத்துல் வஹி பக்கம் 115-118. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 118-121)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad